# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## மக்கள் சாசனம்
## 2022-2023

**திருமதி. என்.கயல்விழி செல்வராஜ்**
**ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2022

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## பொருளடக்கம்


| வ. எண். | திட்ட விவரங்கள் | | பக்கம் எண். |
|---|---|---|---|
| 1 | முகவுரை | | 1 |
| 2 | நலத் திட்டங்கள் | | 1-3 |
| 3 | செயலாக்க அமைப்பு | | 3 |
| 4 | பள்ளிகள் மற்றும் விடுதிகள் | | 4-9 |
| 5 | சிறந்த தனியார் பள்ளிகளில் சேர்த்தல் | | 10-11 |
| 6<br>அ) | கல்வி<br>கல்வி உதவித் தொகை | | 11-16 |
| ஆ) | கல்வி கட்டண சலுகைகள் | | 17-18 |
| இ) | பரிசுத் தொகைத் திட்டம் | | 18-19 |
| 7 | பெண் கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டம் | | 19 |
| 8 | தீண்டாமை ஒழிப்பு | | 20-21 |
| 9 | அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | | 21-23 |
| 10 | சிறந்த எழுத்தாளர்களுக்கு நிதியுதவி வழங்குதல் | | 23-24 |
| 11 | பிரதம மந்திரி முன்னோடி கிராம  திட்டம் | | 24-26 |
| 12 | நல வாரியங்கள் | | 26-29 |
| | **பழங்குடியினர் நலன்** | | |
| 1 | முகவுரை | | 30-31 |
| 2 | கல்வி | | |
| | (i) | பள்ளி மற்றும் விடுதிகள் | 32 |
| | (ii) | கல்வி உதவித் தொகை | 32-34 |
| | (iii) | ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப்பள்ளிகள் | 34 |
| 3 | பழங்குடியினர் நலத் திட்டங்கள் | | |
| | (i) | ஒன்றிய அரசின் திட்டங்கள் | 35-37 |

| வ. எண். | திட்ட விவரங்கள் | பக்கம் எண். |
|---|---|---|
| | (ii) மாநில அரசின் திட்டங்கள் | 37-44 |
| 4 | பழங்குடியினர் நல வாரியம் | 45-46 |
| 5 | பொது தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 | 47 |
| 6 | பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) 2006 சட்டத்தைச் செயல்படுத்துதல். | 48 |
| 7 | பழங்குடியினர் இன பெயர் பட்டியல் | 49-50 |
| 8 | மாவட்ட திட்ட (பழங்குடியினர் நலம்) அலுவலகங்களின் முகவரி மற்றும் தொலைபேசி எண் | 50-51 |
| 9 | பழங்குடியினர் நலத்துறையின் இணையதள விவரங்கள் | 51 |
| | **தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்** | |
| 1 | முகவுரை | 52 |
| 2 | பொருளாதார முன்னேற்ற திட்டங்கள் | 52-64 |
| 3 | திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் (Skill Development Training) | 64-66 |
| 4 | தூய்மைப் பணியாளர் நல வாரியம் | 66-71 |
| **தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்மாநில ஆணையம்** | | 72 |
| | **பிற்சேர்க்கை–1** | 72-90 |

**தமிழ்நாடு அரசு**
**மக்கள் சாசனம்**
2022-2023
**(பொது மக்களின் தகவலுக்காக திட்டங்கள் குறித்த விவரங்கள்)**
**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

**முகவுரை:**

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பபின்படி, தமிழகத்தில் உள்ள மொத்த மக்கள் தொகை 7.21 கோடியில் ஆதிதிராவிடர் இன மக்கள் 1.44 கோடியும் (20.01), பழங்குடியினர் 7.95 இலட்சமும் உள்ளனர். எனவே தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் ஆதி திராவிடர் 20.01 விழுக்காடும், பழங்குடியினர் 1.10 விழுக்காடும் உள்ளனர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகையில் பெரும்பாலானோர் பொருளாதாரத்தில் பின்தங்கி, சமூகத்தின் ஒடுக்கப்பட்ட நிலையில் உள்ளனர். பெரும்பான்மையான குடும்பங்கள் வசதிவாய்ப்புகள் இன்றி உள்ளதோடும் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் ஏனைய வருவாய் ஈட்டும் வழிகளில் அவர்களின் வாய்ப்பு ஒரு வரம்பிற்குள்ளேயே உள்ளது.

**2011 ஆம் ஆண்டு** மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் ஆதி திராவிடர்/பழங்குடியினர் மக்களின் கல்வியறிவு விழுக்காடு பின்வருமாறு:-

(விழுக்காடு)

| விவரம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| அனைத்து மக்கள் | 86.77 | 73.44 | 80.09 |
| ஆதி திராவிடர் | 80.94 | 65.64 | 73.26 |
| பழங்குடியினர் | 61.81 | 46.80 | 54.34 |

**2. நலத் திட்டங்கள்**

இத்துறை பல்வேறு நலத் திட்டங்களை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காகச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக கல்வியின் மூலமாக இம் மக்களைச் சமூக பிரிவினையிலிருந்தும், பொருளாதார இக்கட்டிலிருந்தும் மீளச் செய்து தேசிய நீரோட்டத்தில் சேர்க்கும் வண்ணம் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்துவது மட்டுமின்றி, சமுதாயத்தில் நலிவுற்ற மக்களின் சமூகப் பொருளாதார நிலையைத் துரிதமாக மேம்படுத்தும் நோக்கங்களுடனும், இத்திட்டங்கள் அமைந்துள்ளன.

ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின் கீழ் மாநில அரசு ஒதுக்கீடு செய்யும் நிதியினை 48 துறைத்தலைவர்களைக் கொண்ட 20 செயலாக்கத்துறைகளும் தங்களின் முறையான திட்டங்களோடு ஆதிதிராவிடர்களின் நலனுக்காகவும், குறியீடு

நிர்ணயித்து திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதேபோன்று, பழங்குடியினர் நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களுக்காக 48 துறைத்தலைவர்களைக் கொண்ட 20 செயலாக்கத்துறைகளால் பழங்குடியினர் துணைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர் நலத்துறையால் நிறைவேற்றப்படும் திட்டங்களில் கல்வி உதவித்தொகை முக்கியப் பங்கு வகிக்கின்றது. இத்திட்டம் மட்டுமின்றி, சமூக மேம்பாட்டு திட்டங்களில் ஒரு பாகமாக, வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குதல், வீடுகள் கட்டித் தருதல் மற்றும் அடிப்படை வசதிகளான சாலைகள் அமைத்தல், தெருவிளக்கு வசதி செய்தல், குடிநீர், மயானம் மற்றும் மயானப் பாதை அமைத்தல் போன்ற திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதே போன்று ஏழ்மைச் சூழ்நிலையில் வாழும் நிலை, மலைப்பகுதிகளில் வசிக்கும் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிபடுத்தும் பொருட்டு அவர்கள் வசிக்கின்ற பகுதியிலேயே இத்துறை பாரம்பரிய வீடுகள் கட்டித்தருதல், கறவை மாடுகள் வழங்குதல், குடிநீர் வசதி மற்றும் தெருவிளக்குகள் போன்றவை அமைத்தல் ஆகிய அம்சங்களில் சில சிறப்பு திட்டங்களைத் தீட்டி வருகிறது.

பழங்குடியினர் வாழும் பகுதிகளில் 60 விழுக்காடு நிதி வருவாய் ஈட்டும் திட்டங்களுக்காகவும், 30 விழுக்காடு உள்கட்டமைப்புப் பணிகள் செய்வதற்காகவும் **பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவி (SCA to TSS)** செலவிடப்படுகிறது. இத்திட்டத்தின் பெயர் **பிரதம மந்திரியின் பழங்குடியினர் கிராம முன்மாதிரித் திட்டம்** (Pradhan Mantri Aadi Adrash Gram Yojana**) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.**

பழங்குடியினர் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகளை மேம்படுத்துவதற்காகவும், வனஉரிமைப் பாதுகாப்புச் சட்டத்தைச் செயல்படுத்து வதற்காகவும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 275(1) கூறு நிதி பயன்படுத்தப்படுகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக பல்வேறு துறைகள் குறிப்பிட்ட இலக்கு நிர்ணயித்து, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதுடன், **தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகமும் (தாட்கோ)** பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. தாட்கோ வாயிலாகச் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், முதல் நிலையாக மூன்று வடிவங்களில் அமைந்துள்ளன. அவைகளாவன (1) ஏழை குடும்பங்களுக்கான சிறு தொழில் முனைவோர் திட்டங்கள் (2) திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டங்கள் (3) தனி நபர் தொழில் முனைவோர் திட்டங்கள்

இவைகளுக்குப் போதிய பயிற்சிகளும், மானியங்களும் வழங்கப்படுகின்றன. ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இளைஞர்களுக்குத் தகுதியான வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், பணி வாய்ப்பு சந்தைக்கேற்ப தங்கள் திறனை மேம்படுத்த மேம்பாட்டுப் பயிற்சிகள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன.

**3. செயலாக்க அமைப்பு**

ஆதி திராவிடர் நலத்துறை, பழங்குடியினர் நலத்துறை மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் ஆகியவை ஓர் இந்திய ஆட்சிப் பணியைச் சார்ந்த அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தலைமையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, இயங்குகின்றன. மாநில அளவில் இந்திய ஆட்சிப் பணி அலுவலர் நிலையில் ஆதிதிராவிடர் நலத் துறை ஆணையரும், பழங்குடியினர் நலத்துறையில் ஓர் மத்திய தொழிலாளர் பணி அலுவலர் நிலையில் ஓர் இயக்குநரும் உள்ளனர். மாவட்ட அளவில் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்/திட்ட அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். **"தாட்கோ"** ஒரு மேம்பாட்டு கழகம் என்ற நிலையில் ஆதி திராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர் நிலையில் ஒரு மேலாண்மை இயக்குநர், தாட்கோ நிறுவனத்தினை நிர்வகித்து வருகிறார். களப்பணிகளைச் செயல்படுத்திட ஒவ்வொரு மாவட்டத்திலும் **"தாட்கோ"** மாவட்ட மேலாளர்கள் பணிபுரிகின்றனர்.

மாவட்ட அளவில் அனைத்து துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டங்களை ஒருங்கிணைந்து கண்காணிக்கும் வகையில் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையின் கீழ் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள், மாவட்ட மேலாளர், தாட்கோ உள்ளிட்ட இத்துறை அலுவலர்களும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, வேளாண்மை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், உயர்கல்வி, கால்நடை, பால்வளம் மற்றும் மீன் வளத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் விநியோகம், வருவாய், பள்ளிக்கல்வி, சமூக நலம் மற்றும் சத்துணவுத்துறை ஆகிய துறைகளைச் சார்ந்த மாவட்ட அளவிலான அதிகாரிகளும் முக்கிய ஒருங்கிணைப்பு அலுவலர்களாகச் செயல்பட்டு வருகின்றனர்.

## 4. பள்ளிகள் மற்றும் விடுதிகள்

ஆதி திராவிடர் நலப்பள்ளிகள், பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் பொதுப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியருக்கு பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்:**

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 4.1 | **பாடப்புத்தகங்கள்** | ஒன்று முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் உள்ள அனைத்து மாணாக்கர்கள்.<br>பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் உள்ள அனைத்து மாணாக்கர்கள் | தொடர்புடைய பள்ளித் தலைமை ஆசிரியர்கள் |
| 4.2 | **குறிப்பேடுகள்** | ஒன்று முதல் 10ம் வகுப்பு வரை படிக்கும் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் உள்ள அனைத்து மாணாக்கர்கள்.<br>பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் உள்ள அனைத்து மாணாக்கர்கள் | தொடர்புடைய பள்ளித் தலைமை ஆசிரியர்கள் |
| 4.3 | **சீருடை** | ஒன்று முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் உள்ள அனைத்து மாணாக்கர்கள். பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் உள்ள அனைத்து மாணாக்கர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கி பயிலும் மாணவர்கள். | தொடர்புடைய பள்ளித் தலைமை ஆசிரியர் விடுதிக் காப்பாளர்கள் |

| | | | |
|---|---|---|---|
| 4.4 | **மிதிவண்டிகள்** | அரசு / அரசு உதவி பெறும் /அரசு உதவி பகுதியாகபெறும் (சுயநிதி) பள்ளிகளில் 11ஆம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியின/கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கர்கள் | தொடர்புடைய பள்ளித் தலைமை ஆசிரியர். |
| 4.5 | **சிறப்பு வழிகாட்டி மற்றும் வினா தொகுப்பு** | ஆதி திராவிடர் நலப்பள்ளிகள் அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகள் ஆதிதிராவிடர் விடுதிகள் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகிறது. | சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர் / விடுதிக் காப்பாளர் |

இதேபோன்று, கிராமப் பகுதிகளில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களுக்கு போக்குவரத்து இடைநிற்றலுக்கு காரணமாக இருக்கக் கூடாது என பள்ளி, கல்லூரி மற்றும் தொழிற்கல்வி படிப்பினைத் தொடர அவர்களை ஊக்கபடுத்தும் வண்ணம் விடுதி வசதிகள் செய்து தரப்படுகின்றன.

இத்துறையின் கீழ் இயங்கி வரும் பள்ளிகள் மற்றும் விடுதிகளும் அவற்றில் அனுமதிக்கப்பட்ட மாணாக்கர் எண்ணிக்கையும் கீழ்வருமாறு:–

| **வ. எண்.** | **பள்ளி மற்றும் விடுதிகளின் வகைப்பாடு** | **எண்ணிக்கை** | **மாணாக்கர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. | அரசு ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் | 1,138 | 95,013 |
| 2. | ஆதி திராவிடர் நல விடுதிகள் | 1,324 | 98,509 |

**விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியருக்குச் செய்து தரப்பட்டுள்ள வசதிகள்:–**

i. இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள்.

ii. மாணவியர் விடுதிகளுக்கு சுகாதாரக் குட்டை தகளி (Incinerator) மற்றும் சலவை இயந்திரம்.

iii. அனைத்து விடுதிகளுக்கும் குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், மாவு அரைக்கும் இயந்திரங்கள், மின்னணு எடை கருவிகள், வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

iv. சுகாதார முறையில் சமைத்திட நீராவி கொதிகலன்கள் வழங்கப்பட்டுள்ளன.

v. அனைத்து ஆதிதிராவிடர் நல விடுதிகளிலும் நூலக வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

vi. மாணவ / மாணவியருக்கு ஆண்டுதோறும் பாய் மற்றும் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை போர்வைகள் வழங்கப்படுகின்றன.

vii. அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்கு முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

viii. கல்லூரி விடுதிகளுக்கு இரண்டாண்டுக்கு ஒருமுறை ஜமுக்காளம் வழங்கப்படுகிறது (அரசாணை எண்.47, ஆதிதிராவிடர் மற்றும் நலத் (ஆதிந4) துறை, நாள். 05.05.2021).

**விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்:**

| **வ. எண்** | **திட்டத்தின் பெயர் மற்றும் விவரம்** | **தகுதி** | **தொடர்புகொள்ள வேண்டிய நபர்** |
|---|---|---|---|
| 4.6 | **நான்காம் வகுப்பு முதல் அனைவருக்கும் உணவு மற்றும் உறைவிடம்** | நான்காம் வகுப்பு முதல் கல்லூரி வரை பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர் பள்ளிக்கும் வீட்டிற்கும் உள்ள தூரம் 5 கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும் (இது மாணவியருக்கு பொருந்தாது) பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.2.5 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். | விடுதி காப்பாளர் / காப்பாளினி |

| | | | |
|---|---|---|---|
| 4.7 | **பாய் மற்றும் போர்வை.** விடுதிகளில் தங்கிப் பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் (பாய் – ஆண்டுதோறும், ஒரு போர்வை – இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை). கல்லூரி விடுதிகளுக்கு ஜமுக்காளம் அரசாணை எண்.47, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந4) துறை, நாள். 05.05.2021) | ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர். | விடுதி காப்பாளர்/ காப்பாளினி |
| 4.8 | **உணவுக்கட்டணம்** பள்ளி மாணாக்கர்களுக்கு உணவுக் கட்டணம் ரூ.1,000/–ம், கல்லூரி மாணாக்கர்களுக்கு ரூ.1,100/–ம் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வருகிறது. | ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர். | விடுதி காப்பாளர்/ காப்பாளினி |

| | | | |
|---|---|---|---|
| 4.9 | **இதர செலவினம்** சோப்பு, எண்ணெய் போன்ற பல்வகைச் செலவினத்திற்கு கல்லூரி விடுதி மாணவர்களுக்கு ரூ.75/-ம் பள்ளி விடுதி மாணவர்களுக்கு ரூ.50/-ம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட தொகை பள்ளி விடுதிகளுக்கு ரூ.100/- மற்றும் கல்லூரி விடுதிகளுக்கு ரூ.150/- என இரண்டு மடங்காக உயர்த்தி (அரசாணை எண்.84, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந4) துறை, நாள். 09.11.2021) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர். | விடுதி காப்பாளர்/ காப்பாளினி |

| | | | |
|---|---|---|---|
| 4.10 | **சிறப்பு உணவு கட்டணம்** பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.40/–ம், கல்லூரி மாணாக்கர்களுக்கு ரூ.80/–ம் வழுங்கப்படும். பொங்கல், குடியரசு தினம், தமிழ்வருடப் பிறப்பு, சுதந்திர தினம், தீபாவளி ஆகிய நாட்களில் வழுங்கப்படும் (அரசாணை எண்.77, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந4)துறை, நாள். 26.10.2021) | ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர். | விடுதி காப்பாளர்/ காப்பாளினி |
| 4.11 | **தனியார் விடுதி கட்டணச் சலுகை** அரசால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 23 விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணாக்கர்களுக்கு உணவுக் கட்டணம் மற்றும் பல்வகை செலவுகளான உணவு கட்டணம் அகராதி, அட்லஸ், கோரைப்பாய், போர்வை, சீருடை, தையற்கூலி மற்றும் இதர செலவினங்கள் ஆகியவை வழுங்கப்படும். | இத்தொண்டு நிறுவன விடுதிகளில் தங்கி பயிலும், ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர். | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

**5. சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியரை சிறந்த தனியார் பள்ளிகளில 6 மற்றும் 11–ஆம் வகுப்பில் சேர்த்தல்.**

5–ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியரில் சிறந்த மாணவ மாணவியரை வட்டார அளவில் தனித்தேர்வு ஒன்று நடத்தி அதில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவன் (அல்லது) ஒரு மாணவி தேர்ந்தெடுக்கப்பட்டு தனியார் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6–ஆம் வகுப்பில் சேர்த்து அவர்கள் தொடர்ந்து 12–ஆம் வகுப்பு வரை பயில ஆகும் செலவு முழுவதையும் அரசே ஏற்கிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய |
|---|---|---|---|
| 5.1 | **சிறப்பு மிக்க பள்ளிகளில் மாணவர்களை 6–ஆம் வகுப்பில் சேர்த்தல்** | அனைத்து வகையான அரசு, அரசு உதவி பெறும், மாநகராட்சி, நகராட்சி, ஆதி திராவிடர் நலப்பள்ளிகள், அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணாக்கர்களை வட்டார அளவில் தனித்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய கிறித்துவ மாணாக்கர்கள். வருமான வரம்பு இல்லை. | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |
| 5.2 | **சிறப்பு மிக்க பள்ளிகளில் மாணாக்கர்களை 11–ஆம் வகுப்பில் சேர்த்தல்** | அனைத்து வகையான அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்ற 10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்டந்தோறும் அதிக மதிப்பெண்கள் பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணாக்கர்கள் பெற்றோர்களின் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சம் வரை. | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் அகில இந்திய அளவில் நடைபெறும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளவும், அவர்கள் திறமையை வளர்த்துக் கொள்ளவும் 10–ஆம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ மாணவியரில், ஒரு மாவட்டத்திற்கு 10 மாணவ, மாணவியர் வீதம் (குறைந்தபட்சம் 3

மாணவிகள் உட்பட) மொத்தம் 385 மாணவ மாணவியர் தேர்வு செய்யப்பட்டு **சிறந்த பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில்** 11–ஆம் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். இதற்காக அரசு ஆண்டு தோறும் ஒரு மாணவர் (அல்லது) ஒரு மாணவியருக்கு ரூ.28,000/– செலவிடுகிறது.

## 6. கல்வி

### (அ) உதவித் தொகை

சமூக அளவிலும் பொருளாதார அளவிலும் பின்தங்கிய ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ இனத்தை சார்ந்தவர்களை சமூக, பொருளாதார, கல்வி முன்னேற்றமடைய செய்தல், சமூக மதிப்பை உயர்த்துதல், சுயசார்புடையவர்களாக மாற்றுதல் ஆகியவற்றை உறுதிபடுத்தும் உயரிய நோக்குடன் இப்பிரிவினைச் சார்ந்த மாணவர்களுக்கு ஒன்றாம் வகுப்பு முதல் முதுகலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் பட்டப்படிப்பு வரை பல்வேறு கல்வி உதவித் தொகைத் திட்டங்களை ஆதிதிராவிடர் நலத்துறை செயல்படுத்தி வருகிறது.

சில திட்டங்கள் பயன்பெறும் மாணாக்கர்களின் சாதி மற்றும் வருமானம் ஆகியவற்றை கணக்கில் கொள்ளாது செயல்படுத்தப்படுகின்றன. பல திட்டங்கள் மிகுந்த ஏழ்மை நிலையிலுள்ளோரை முன்னேற்றும் நோக்குடன் அவர்தம் சாதி, வருமானம், அம்மாணாக்கர்கள் பயிலும் கல்வி நிறுவன வகைபாடு(அரசு/உதவி பெறும்/சுயநிதி கல்வி நிறுவனங்கள்) மற்றும் இன்னபிற காரணிகளின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 6.1 | **பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான (Post Matric) ஒன்றிய அரசு கல்வி உதவித் தொகை திட்டம்.**<br>அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், கல்லூரிகளுக்கு மாணவர்கள் செலுத்த வேண்டிய திருப்பி அளிக்கப்படாத (Non refundable fees) கட்டாயக் கட்டணங்கள் மற்றும் பராமரிப்புத் தொகை ஆகியவை கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.<br>சுயநிதி கல்வி நிலையங்களில் அரசு / நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மாணவர்களுக்கு அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக் குழு நியமித்த கட்டணங்கள் / அரசு நிர்ணயிக்கும் கட்டணங்கள் கல்விப் படியுடன் கல்வி உதவித் | ➢ 10ஆம் வகுப்பிற்கு மேல் படிக்கும் மாணாக்கர்கள்<br>➢ பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சம் (அனைத்து வகை வருமானமும் சேர்த்து கணக்கிடப்படும்)<br>➢ ஆதி திராவிடர் மாணாக்கர்களுக்கு மட்டும் | அ) பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/ கல்லூரி முதல்வர்கள்/ மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.<br>ஆ)ஆணையர், ஆதி திராவிடர் நலன் (பிற மாநிலங்களில் பத்தாம் |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| | தொகையாக வழங்கப்படும். சுயநிதி கல்லூரிகளிலுள்ள அரசு ஒதுக்கீடு அல்லாத இடங்களுக்கு ஒன்றிய அரசு விதித்துள்ள கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் நேர்வுகளில் கல்வி உதவித் தொகை மாணாக்கர்களின் வங்கி கணக்கில் நேரிடையாக வரவு வைக்கப்படும். உரிய அதிகாரம் பெற்ற அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட கட்டண நிர்ணய / கட்டணம் வரைமுறைபடுத்தும் குழுவால் அத்தகைய பாடப்பிரிவுகளுக்கான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பங்களை வரவேற்க விளம்பரம் செய்தல், வரப்பெற்ற விண்ணப்பங்களின் தரப்பட்டியல் வெளியிடுதல், தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்களை தேர்வு செய்தல் ஆகிய நடைமுறைகளை உள்ளடக்கியவாறு ஒளிவுமறைவற்ற முறையில் அத்தைகைய இடங்களுக்கான சேர்க்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>**வழங்கப்படும் கல்விப் படி விவரம்** | | வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புகளை பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆதி திராவிடர் மாணவர்கள் மட்டும்) |

| தொகுதி | படிப்புகள் | ஒரு வருடத்திற்கான கல்விப்படி (ரூ.) விடுதி மாணாக்கர் (Hosteller) | ஒரு வருடத்திற்கான கல்விப்படி (ரூ.) வெளி மாணாக்கர் (Day Scholar) |
|---|---|---|---|
| I | பொறியியல், மருத்துவம், நவீன ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பம் (Fashion Technology), கால்நடை, வேளாண்மை மற்றும் அதைச்சார்ந்த தொழில் படிப்புகளில் பட்டம் மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு<br>மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம் / பட்டயக் கணக்கர் (CA/CWA/CS/CFA etc.,) மற்றும் முதுநிலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் பட்டப்படிப்பு<br>(M.Phil, Ph.D., &Post Doctoral programmes) | 13,500/- | 7,000/- |
| II | 12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாக கொண்ட மருந்தாக்கியல், செவிலியர், LLB, விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஹோட்டல் மேலாண்மை போன்ற தொழிற்படிப்புகளில் பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள்<br>(B.Sc.,(Nursing), B.Pharm, B.O.T, B.P.T, M.Sc (Nursing), M.Pharm, M.P.T etc., ) | 9,500/- | 6,500/- |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| | III தொகுதி I மற்றும் II–ல் இடம் பெறாத இதர இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டப்படிப்புகள் (எ.கா B.A./ B.Sc./B.Com./M.A.,/M.Sc./M.Com., etc., ) | 6,000/– | 3,000/– |
| | IV 10–ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட தொழில் நுட்பப் பட்டயப்படிப்புகள், சான்றிதழ் படிப்புகள், மேல்நிலைக் கல்வி படிப்புகள் மற்றும் தொழிற்பயிற்சி படிப்புகள். (எ.கா. XI, XII, ITI, தொழிற் பயிற்சிக் கல்வி etc.,) | 4,000/– | 2,500/– |
| 6.2 | **ஒன்றிய அரசின் ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத்திட்டம்– ஆதிதிராவிடர் மற்றும் பிற மாணவர்கள்:–**<br>2022–2023 ஆம் ஆண்டு முதல் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் மாணவர்களுக்கான ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டம் மற்றும் ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சுகாதார தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே திட்டமாக செயல்படுத்தப்படும். மேலும் இத்திட்டம் இரண்டு கூறுகளாக செயல்படுத்தப்படும்<br><u>திட்டக்கூறு –1</u>:<br>ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை திட்டம்.<br><br><u>திட்டக்கூறு –2</u>:<br>ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சுகாதார தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டம். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை விவரம்: | <u>திட்டக்கூறு–1:</u><br>அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் **9** மற்றும் 10–ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர் மாணாக்கர்களுக்கு மட்டும்.<br><br>பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமான வரம்பு ஆதி திராவிடர் மாணாக்கர்களுக்கு ரூ.2.50 இலட்சம்<br><br><u>திட்டக்கூறு –2</u>:<br>அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் **1** முதல் மற்றும் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்கள்.<br>சாதி, இனம் கணக்கின்றி அனைத்து | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் |

<table>
<tr><th>வ. எண்</th><th>திட்டத்தின் பெயர் மற்றும் விவரம்</th><th>தகுதி</th><th>தொடர்புகொள்ள வேண்டிய நபர்</th></tr>
<tr><td></td><td><table>
<tr><th></th><th>வெளி மாணாக்கர் (Day Scholar)</th><th>விடுதி மாணாக்கர்</th></tr>
<tr><td colspan="3">ஒரு ஆண்டுக்கு</td></tr>
<tr><td>திட்டக்கூறு –1: (வகுப்பு 9–10)</td><td>ரூ.3500/–</td><td>ரூ.7000/–</td></tr>
<tr><td>திட்டக்கூறு –2</td><td>ரூ.3500/– (வகுப்பு 1–10)</td><td>ரூ.8000/– (வகுப்பு 3–10)</td></tr>
</table></td><td>பிரிவினருக்கும் பொருந்தும்.<br>வருமான வரம்பு இல்லை.<br>பெற்றோரில் யாரேனும் ஒருவர் துப்புரவு பணி, தோல் பதனிடுதல், தோல் உரித்தல் மற்றும் கழிவு பொருட்களிலிருந்து மறுசுழற்சிக்கு உகந்த பொருட்களை பிரித்து சேகரிக்கும் தொழில் ஈடுபட்டிருக்க வேண்டும்.</td><td></td></tr>
<tr><td>6.3</td><td>உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை.<br>அரசு / அரசு உதவி பெறும் கல்வி நிலைய கட்டண விடுதிகளில் தங்கிப் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய கிறித்துவ மாணாக்கர்களுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகையுடன் கூடுதலாக விடுதி நிதியுதவித் தொகை வழங்கப்படும்.<br>(அ) பட்டப்படிப்பு, பாலிடெக்னிக் படிப்பிற்கு ஆண்டிற்கு ரூ.7500/–உம்<br>(ஆ) முதுகலைப் பட்டப் படிப்பு, தொழில் படிப்புகளில் இளங்கலை/முதுகலை படிப்புகளுக்கு ஆண்டிற்கு ரூ.8000/–உம் நிதிஉதவித் தொகையாக வழங்கப்படும்.</td><td>ஆண்டு வருமான வரம்பு ரூ.2.50 இலட்சம் வரை<br>இலவச விடுதியில் அல்லாமல் கட்டண விடுதிகளில் தங்கிப் பயில்பவர்கள்</td><td>கல்லூரி முதல்வர்கள் / மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்/ திட்ட அலுவலர். பழங்குடியினர் நலம்.</td></tr>
<tr><td>6.4</td><td>அயல்நாடு சென்று உயர் கல்வி பயில உதவித்தொகை<br>முதுகலைப் பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட ஆராய்ச்சிப் படிப்பை அயல்நாட்டில் மேற்கொள்ள விரும்பும் மாணாக்கருக்கு ஊக்கமளிக்கும் வகையில் இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை கீழ்க்குறித்துள்ளவாறு வழங்கப்படும்:</td><td>பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.8 இலட்சம் வரை</td><td><u>திட்டப்பகுதி–1:</u><br>தாட்கோ மேலாளர் தாட்கோ அலுவலகம்.<br><br><u>திட்டப்பகுதி–2:</u><br>ஆதி திராவிடர் நல</td></tr>
</table>

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| | கல்வி உதவித்தொகையில் கல்விக் கட்டணம் மற்றும் வரிகளுக்கு உள்ளபடியான செலவினம் வழங்கப்படும். வாழ்க்கை செலவினம் மற்றும் இதரக் கட்டணங்கள் மாணாக்கர் கல்வி பயிலும் அயல்நாட்டினை பொறுத்து வழங்கப்படும்.<br><br>அதிக மாணாக்கரை இத்திட்டத்தின் கீழ் ஈர்க்கும்பொருட்டு 2021-2022 ஆம் ஆண்டு முதல் இரு திட்டப்பகுதிகளை கொண்டதாக கீழ்க்குறித்துள்ளவாறு மறுசீரமைக்கப்பட்டுள்ளது:<br><br>திட்டப்பகுதி-1ன் கீழ் பெரும்பாலான வெளிநாடுகளில் உயர்கல்வி பயில விதிக்கப்பட்டுள்ள அடிப்படை தகுதி தேர்வுகளான IELTS, GRE, TOEFL, GMAT போன்ற தேர்வுகளில் தேர்ச்சி பெற பயிற்சியளிக்கப்படும். அதன்படி ஒவ்வொரு தகுதி தேர்விற்கும் 125 மாணக்கர் வீதம் வருடத்திற்கு மொத்தம் 500 மாணாக்கர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.<br><br>திட்டப்பகுதி 2ன் கீழ் அயல் நாட்டு கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறுவோரில் ஒரு வருடத்திற்கு 10 தகுதி பெற்ற மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ஓராண்டிற்கு ரூ.35.00 இலட்சத்திற்கு மிகாமல் வழங்கப்படும். | ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் இன மாணாக்கர் மட்டும். | ஆணையர், சென்னை-5.<br><br>இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-05. |
| 6.5 | **முழுநேர முனைவர் பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்கு ஊக்கத் தொகை திட்டம்**<br>தமிழ்நாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் முழுநேர முனைவர் பட்டப்படிப்பு பயிலும் 1600 மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,00,000/- ஊக்கத் தொகையாக வழங்கப்படும். | முழு நேர முனைவர் பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு மட்டும்<br>பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.8.00 இலட்சம் | ஆதி திராவிடர் நல ஆணையர், சென்னை-5.<br><br>பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை - 5. |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 6.6 | **10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான (State Post-Matric) மாநில அரசின் சிறப்பு உதவித் தொகை திட்டம்** ஒன்றிய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற இயலாத ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர்களுக்கு மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கப்படும். ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கல்விப்படி மற்றும் கல்விக் கட்டணங்களுக்கு இணையாக கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும். | ஒன்றிய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற இயலாத ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர்களுக்கு மட்டும். பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். தமிழக அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு வருமானம் கணக்கிடும் போது அகவிலைப்படியை சேர்க்காமல் வருமானம் கணக்கிடவேண்டும் | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கல்லூரி முதல்வர்கள் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்/ திட்ட அலுவலர். பழங்குடியினர் நலம். |

## (ஆ) கல்விக் கட்டணச் சலுகைகள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|
| 6.8 | **கற்பிப்புக் கட்டணச் சலுகை**<br>அரசு, அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் அனைத்து ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர்களுக்கு கற்பிப்புக் கட்டணம் விலக்களிப்பு செய்யப்படவேண்டும். விலக்களிப்பு செய்யப்பட்ட கற்பிப்புக் கட்டணம் கல்வி நிறுவனத்திற்கு ஈடுசெய்யப்படும். | வருமான வரம்பு இல்லை | கல்வி நிறுவனங்கள் தொடர்புடைய கல்வித் துறைத் தலைவர்கள் மூலம் ஆதி திராவிடர் நல ஆணையர்/ பழங்குடியினர் நல இயக்குநருக்கு கற்பிப்புக் கட்டணம் பெறுவதற்கான முன்மொழிவினை அனுப்ப வேண்டும். |
| 6.9 | **பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணங்கள்**<br>அரசு / அரசு நிதி உதவிப் பெறும் கலை, அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப் படிப்புக்களை பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இன மாணவ மாணவியருக்கு சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணங்கள் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன. | வருமான வரம்பு இல்லை | கல்லூரி முதல்வர்கள் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் / திட்ட அலுவலர்கள் (பழங்குடியினர் நலம்) |
| 6.10 | **முதுகலைப் பட்டம் படிக்கும் மாணவியர்களுக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணங்கள்**<br>அரசு / அரசு நிதி உதவிப் பெறும் கலை, அறிவியல் கல்லூரிகளில் முதுகலைப் பட்டப்படிப்புக்களை பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இன மாணவியர்களுக்கு மட்டும் சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணங்கள் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன. | வருமான வரம்பு இல்லை. | கல்லூரி முதல்வர்கள். மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்/திட்ட அலுவலர், பழங்குடியினர் நலம். |
| 6.11 | **சிறப்புக் கட்டணச் சலுகை**<br>ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளிகளில் 6–ஆம் வகுப்பு | வருமான வரம்பு இல்லை. | தலைமை ஆசிரியர் மூலமாக மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | முதல் 12–ஆம் வகுப்பு முடிய பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் சிறப்புக் கட்டணம் விலக்களிக்கப்படுகிறது. விலக்களிக்கப்பட்ட சிறப்புக் கட்டணம் கல்வி நிறுவனத்திற்கு ஈடுசெய்யப்படும். | | பழங்குடியினர் நல அலுவலர் /திட்ட அலுவலர், பழங்குடியினர் நலம். |
| 6.12 | **தேர்வுக் கட்டணம், விண்ணப்பக் கட்டணம், பதிவுக் கட்டணச் சலுகைகள்** அரசு தேர்வுகள் துறைக்கு மாணக்கர் சார்பாக தேர்வு கட்டணம் ஆதிதிராவிடர் நலத் துறையால் ஈடுசெய்யப்படும். அரசு / அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பட்டப்படிப்பு, முதுகலைப்பட்ட மேற்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து. விலக்களிக்கப்படுகிறது. அதேபோல அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் பொதுத் தேர்வு எழுதும் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணாக்கருக்கு தேர்வு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. | வருமான வரம்பு இல்லை. ஆதி திராவிடர், பழங்குடியினர், மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர்களாக இருக்க வேண்டும் | தேர்வு துறை இயக்குநரால் ஆதி திராவிடர் நல ஆணையருக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணத்தைப் பெற கல்வி நிறுவனங்கள் தொடர்புடைய மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலருக்கு கருத்துரு சமர்ப்பிக்க வேண்டும். |

**(இ) பரிசுத் தொகைத் திட்டம்**

இளநிலை பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் தொழில்நுட்ப படிப்புகளில் முதல் அமர்விலேயே 60 விழுக்காடு அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவிகளுக்கு கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|
| 6.13 | **பரிசுத் தொகைத் திட்டம்** இளநிலை பட்டப்படிப்பு மாணவர்களுக்கு தலா ரூ.3000/– பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு தலா ரூ.5,000/– தொழிற்கல்வி மாணவர்களுக்கு தலா ரூ.6,000/– | ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இன மாணாக்கர். பட்டப்படிப்பு, முதுகலைப் பட்ட படிப்பு மற்றும் தொழில் | ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5. கல்லூரி முதல்வர் / பல்கலைக் கழக பதிவாளர். |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|
| | | நுட்பப் படிப்புகளில் 60 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெறும் 1000 மாணாக்கர்கள் வருமான வரம்பு இல்லை. | |

## 7. பெண்கல்வி ஊக்குவிப்பு திட்டம்

மாணவியர் இடைநிற்றலைத் தவிர்க்கவும் பெண் குழந்தைகளை அதிக அளவில் கல்வி பயில செய்யும் பொருட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 3 முதல் 6–ஆம் வகுப்பு வரை கல்வியைத் தொடரும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியரை ஊக்குவிக்கும் வகையில் ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. மேலும், இத்திட்டமானது 2013–2014 –ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 7–ஆம் வகுப்பு மற்றும் 8–ஆம் வகுப்புக்களில் பயிலும் மாணவியர்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|
| 7.1 | **பெண்கல்வி ஊக்குவிப்பு சிறப்பு திட்டம்**<br>மாநிலம் முழுவதும் உள்ள 3–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் பெண் குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.500/– வழங்கப்படுகிறது. 6–ஆம் வகுப்பில் பயில்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000/– வழங்கப்படுகிறது.<br>7 மற்றும் 8–ஆம் வகுப்புப் பயில்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1500/– வழங்கப்படுகிறது.<br>ஊக்கத் தொகை மாணவியர் / அவர்தம் பெற்றோரின் சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. | அரசு/ அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினப் பெண் குழந்தைகள் மட்டும். வருமான வரம்பு இல்லை. | தலைமை ஆசிரியர்கள் மூலமாக மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

8. **தீண்டாமை ஒழிப்பு**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளைத் தடுக்க இத்துறை அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இதற்காக, 1955ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989ஆம் ஆண்டு ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்பு சட்டம், தடுப்பு விதிகள் போன்றவை ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்டு, மாநில அரசால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989 மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (வன்கொடுமை தடுப்பு) விதிகள் 1995–இல் அரசின் ஒப்புதலோடு ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்பட்டு அவை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (வன்கொடுமை தடுப்பு) திருத்தச்சட்டம் 2015 மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (வன்கொடுமை தடுப்பு) திருத்தப்பட்ட விதிகள் 2016 என ஒன்றிய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டு முறையே 01.01.2016, 14.04.2016 மற்றும் 27.06.2018 முதல் அமலுக்கு வந்தது.

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னையைத் தவிர) தீண்டாமையை விட்டொழித்து பொது மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்கிராமத்திற்கு ரூ.10 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது.

| வ. எண் | குற்றத்தின் பெயர் மற்றும் விவரம் | தீருதவிகளின் விவரம் | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|
| 8.1 | **கலவரங்களால் / வன் கொடுமைகளால் பாதிக்கப்பட்ட ஆதி திராவிடர் / பழங்குடியினருக்கு உதவி.** ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் – 2015 விதிகள் 2016 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகளில் இருந்து பாதுகாத்தல். (குற்றத்தின் பெயர் மற்றும் தீருதவித் தொகை விவரம் பிற்சேர்க்கை–1ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.) | கலவரங்களால் / வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டு உயிரை இழக்கும் தனியரின் குடும்பத்திற்கு குறைந்த பட்சமாக ரூ,85,000/–ம், அதிகபட்சமாக ரூ.8.25/– இலட்சம் தீருதவியாக ஏற்கனவே வழங்கப்பட்டு வந்தது. தற்போது அரசாணை (நிலை) எண். 94 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(கொடு தடு1), துறை நாள். 24.11.2021 மற்றும் அரசாணை (நிலை) எண். 4 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(கொடு தடு1), துறை நாள். 02.02.2022–ன்படி இனி குறைந்தபட்சம் ரூ.1.00 இலட்சம் ரூபாயாகவும், அதிகபட்சம் ரூ.12.00 இலட்சம் ரூபாயாகவும் மாநில அரசு | மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

| | | | |
|---|---|---|---|
| | | நிதி மூலம் உயர்த்தி வழங்கப்படும் என அரசு ஆணையிட்டுள்ளது.<br><br>மேலும், அக்குடும்பத்தில் ஒருவருக்கு அரசுப் பணி, அக்குடும்பத்திற்கு ஒரு வீடும், விவசாய நிலமும் வழங்கப்படும். விதவை அல்லது குடும்பத்தை சார்ந்தோருக்கு அரசு ஊழியர்களுக்கு தரப்படும் அகவிலைப்படியுடன் கூடிய அடிப்படை ஓய்வூதியம் ரூ.5000/- வழங்கப்படும் | |
| 8.2 | **நல்லிணக்கத்துடன் வாழும் கிராமங்களைத் தேர்வு செய்து பரிசு வழங்குதல்**.<br>மாவட்டந்தோறும் (சென்னை நீங்கலாக)<br>இன நல்லிணக்கத்துடன் வாழும் கிராமம் ஒன்றினை தேர்வு செய்து ரூ.10 இலட்சம் பரிசு வழங்குதல் | தீண்டாமையைக் கடைபிடிக்காமலும், இன நல்லிணக்கத்துடன் வாழும் கிராமம். | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

**9. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்**

ஏழ்மை நிலையிலுள்ள மற்றும் வீடற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது, அடிப்படை வசதிகள் செய்து தருவதில் முன்னுரிமை அளிக்கப்படும் திட்டங்களில் ஒன்றாக விளங்குகிறது. கிணறுகள், ஆழ்குழாய் கிணறுகள் அமைத்துத் தரப்படுகின்றன. மேலும் மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. இல்லத் திருமணங்கள் நடத்துவதற்கும், சமுதாய விழாக்கள், கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்குமான தேவையினைப் பூர்த்தி செய்ய சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 9.1 | **இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம்**<br>கிராமப்புறத்தில் 3 சென்ட், பேரூராட்சியில், நகராட்சியில் 1.50 சென்ட் மற்றும் மாநகராட்சியில் 1 சென்ட் வரை வீட்டுமனை வழங்கப்படும். | வீட்டுமனை சொந்தமாக இருக்கக் கூடாது. ஆண்டு வருமான வரம்பு தமிழகம் முழுவதும் உள்ளவர்களுக்கு ஒரே அளவாக ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.72,000/- ஆதி திராவிடர் / பழங்குடியினராக இருக்க வேண்டும் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் தனி வட்டாட்சியர் (ஆதி திராவிடர் நலம்) |
| 9.2 | **மயானம்**<br>மயான மேம்பாடு மயானத்திற்குச் செல்லும் பாதை மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தருதல். | ஆதிதிராவிடர், குடியிருப்பு களுக்கு மயானம் இல்லாமை மயானம் இருந்தால் அதற்குப் பொது பாதை வசதி. | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |
| 9.3 | **இணைப்புச் சாலை**<br>ஆதிதிராவிடர் குடியிருப்புகளிலிருந்து பிரதான சாலைக்கு இணைப்பு சாலை ஏற்படுத்துதல். | ஆதிதிராவிடர் வசிக்கும் குடியிருப்புகளை இணைக்கும் இணைப்புச் சாலைகள் அமைத்து தருதல் | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஊராட்சி ஒன்றிய ஆணையர் மற்றும் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |
| 9.4 | **சமுதாய நலக்கூடங்கள்**<br>ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகளில் திருமணம் (ம) சமுதாய விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த சமுதாய நலக்கூடங்கள் கட்டித் தரப்படுகின்றன. | சமுதாய நலக்கூடங்கள் இல்லாத ஆதி திராவிடர் / பழங்குடியினர் குடியிருப்புகள் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / மாவட்ட மேலாளர், தாட்கோ. |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 9.5 | **ஈமச்சடங்குக்கு உதவி** ஏழ்மை நிலையில் உள்ள குடும்பத்தில் யாராவது இறந்துவிட்டால் ஈமச்சடங்கிற்கு ரூ.5000/- மானியமாக அளிக்கப் படுகின்றது | ஆண்டு வருமான வரம்பு தமிழகம் முழுவதும் உள்ளவர்களுக்கு ஒரே அளவாக ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.72,000/- இருக்க வேண்டும் ஆதிதிராவிடராக இருக்க வேண்டும். | வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம் செயல் அலுவலர், பேரூராட்சி, நகராட்சி / மாநகராட்சி / மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |
| 9.6 | **சமத்துவ மயானம் ஊக்கத் தொகை வழுங்குதல்** மாவட்டம் தோறும் (சென்னை நீங்கலாக) சாதி வேறுபாடுகளற்ற பயன்பாட்டிலுள்ள மயானங்கள் உள்ள சிற்றூர்களை தேர்ந்தெடுந்து ஒரு சிற்றூருக்கு ரூ.10.00 லட்சம் வீதம் மூன்று சிற்றூர்களுக்கு ரூ.30.00 லட்சம் வீதம் நிதியுதவி அளிக்கப்படுகிறது. | சாதி வேறுபாடுகளற்ற மயானங்களாக இருக்க வேண்டும் . | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

## 10. சிறந்த எழுத்தாளர்களுக்கு நிதி உதவி வழங்குதல்

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| | சிறந்த எழுத்தாளர்களுக்கு ரூ.50,000/- நிதி உதவி வழுங்குதல் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகியோரில் சிறந்த எழுத்தாற்றல் மிக்க 10 படைப்பாளிகளுக்கு நிதி உதவி வழுங்குதல் | சிறந்த படைப்பாக இருத்தல் வேண்டும். | ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-5. |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| | இவர்களை தவிர ஆதிதிராவிடர் அல்லாத ஒருவருக்கும் இந்த வாய்ப்பு அளிக்கப்படும் மொத்தம் 10+1 = 11 எழுத்தாளர்கள்.<br><br>ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் / மே மாதங்களில் செய்தித் தாள்களில் விளம்பரம் வெளியிடப்படும்.<br><br>சிறந்த எழுத்தாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு எழுத்தாளருக்கும் ரூ.50,000/- நிதி உதவி வழங்கப்படும். | | |

**11. <u>பிரதம மந்திரியின் ஆதிதிராவிட மக்கள் முன்னேற்ற திட்டம் (Pradhan Mantri– Anusuchit Jaati Abhyuday Yojana – PM–AJAY)</u>**

2021–2022–ஆம் ஆண்டு முதல் ஏற்கனவே இயங்கி வரும் பிரதம மந்திரியின் முன்னோடி கிராமத் திட்டம் (Pradhan Mantri Adarsh Gram Yojana–PMAGY), ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் (Special Central Assistance to Scheduled Castes Sub Plan–SCA to SCSP), பாபு ஜெகஜீவன்ராம் விடுதி கட்டிடம் கட்டும் திட்டம் (Babu Jagjivan Ram Chatrawas Yojana–BJRCY) ஆகிய மூன்று திட்டங்களை ஒருங்கிணைத்து பிரதம மந்திரியின் ஆதிதிராவிட மக்கள் முன்னேற்றத் திட்டம் ( pradhan Mantri– Anusuchit Jaati Abhyuday Yojana– PM–AJAY) எனும் புதிய திட்டமாக ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1. **<u>பிரதம மந்திரி முன்னோடி கிராம திட்டம்</u>** (PMAGY),

50 சதவீதத்திற்கு மேல் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்வதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். பிரதம மந்திரி முன்னோடி கிராம திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களின் அடிப்படை கட்டமைப்பை மேம்படுத்தும் குறிகாட்டிகளாக குடிநீர், கல்வி, சுகாதாரம், விவசாய நடைமுறைகள், தூய்மையான எரிபொருள், மின்சாரம், வாழ்வாதாரம் மற்றும் திறன் மேம்பாடு, டிஜிட்டல் மயமாக்கம், நிதி சேர்க்கை ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்திட ஒன்றிய அரசால் நிதி ஒதுக்கீடு

வழங்கப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து முகமைகள் மூலம் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

தகுதி – ஆதிதிராவிடர்கள் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் வசிக்கும் கிராமங்களில் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

தொடர்புகொள்ள வேண்டிய நபர் – மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை.

**2.) ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் (SCA to SCSP)**

**நோக்கம்:**

ஆதிதிராவிடர் மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், குடும்ப வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்களில் உதவுவதற்காகவும், பொருளாதாரம் மற்றும் திறன் மேம்பாடு அடையச் செய்யவும், உற்பத்தித் திறன் மற்றும் வருமானத்தை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**செயலாக்கம்:**

மாநில அரசின் ஆதிதிராவிடர் துணைத்திட்டத்திற்கு கூடுதலாக வலுசேர்க்கும் வகையில் ஒன்றிய அரசு கூடுதலாக நிதியுதவி வழங்குகிறது. இந்த நிதியில் 80 விழுக்காடு, ஆதிதிராவிடர் மக்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காகவும், 10 விழுக்காடு வேலையில்லா ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கு தாட்கோ மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்க தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மேலாண்மை இயக்குநருக்கு ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. மீதமுள்ள 10 விழுக்காடு நிதியானது 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் ஆதிதிராவிடர் வசிக்கும் குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் அவர்களின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தகுதி:– ஆதிதிராவிடர்கள் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் வசிக்கும் குடியிருப்புகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

தொடர்புகொள்ள வேண்டிய நபர்:– மாவட்ட மேலாளர் (தாட்கோ) மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்.

3) பாபு ஜெகஜீவன்ராம் விடுதி கட்டிடம் திட்டம் (Babu Jagjivan Ram Chatrawas Yojana–BJRCY)

ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் மூலம் பாபு ஜெகஜீவன்ராம் சத்ரவாஸ் யோஜனா என்ற திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் நலத்துறையில் புதிய மாணவ மாணவியர் விடுதி கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. மாணவியர் விடுதி கட்டிடம் கட்டுவதற்கு 100 விழுக்காடு பங்களிப்புடனும், மாணவர் விடுதி கட்டிடம் கட்டுவதற்கு 50 விழுக்காடு பங்களிப்புடனும் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

மேற்படி திட்டத்தின் மூலம் 2003–2004 முதல் 2008–2009ஆம் ஆண்டு வரை 208 விடுதிகளுக்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. தற்போது மேற்படி திட்டத்தின் கீழ் 2019–2020 மற்றும் 2021–2022ஆம் ஆண்டிற்கு 13 விடுதிகளுக்கு கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது.

<u>தகுதி:–</u>ஆதிதிராவிடர் விடுதிகளுக்கு மட்டும் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

<u>தொடர்புகொள்ள வேண்டிய நபர்:–</u> மாவட்ட மேலாளர் (தாட்கோ), மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்.

## 12. தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம்

தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் 2009ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அரசு கடிதம் எண்.20/ஆதிந6/2010–1, நாள் 10.03.2010–இன்படி ஆதிதிராவிடர் நல ஆணையர் இவ்வாரியத்தின் உறுப்பினர்–செயலராக உள்ளார்.

இவ்வாரியத்தில் பதிவு செய்த உறுப்பினர்கள் வயதானவர்களுக்கான ஓய்வூதியம், மூக்குக் கண்ணாடி நிதியுதவி, மகப்பேறு நிதியுதவி, பிள்ளைகளுக்கான திருமண நிதியுதவி, கல்வி உதவித்தொகை, விபத்துகளுக்கான நிதியுதவி / ஈமச்சடங்கிற்கான நிதியுதவி போன்ற உதவிகளைப் பெற தகுதியுடையவராவர். 2009–10ஆம் ஆண்டில் ரூ.0.50 இலட்சம், 2010–11ஆம் ஆண்டில் ரூ.0.50 இலட்சம் மொத்தம் நிதியுதவியாக ரூ.1.00 கோடி பெறப்பட்டு, இவ்வாரிய உறுப்பினர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**<u>தமிழ்நாடு புதிரைவண்ணார் நலவாரிய உறுப்பினர்களுக்கான நலத்திட்ட உதவிகள்</u>**

| வ. எண். | | திட்ட உதவிகள் | உதவித்தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | **விபத்துக் காப்பீட்டுத் திட்டம்** | | |
| | (அ) விபத்து இறப்பு | | 1,00,000/- |
| | (ஆ) விபத்து ஊனம் | | 10,000/-முதல்1,00,000 வரை |
| 2 | இயற்கையாக மரணமடைந்தவரின் குடும்பத்தினருக்கு உதவி | | 15,000/- |
| 3 | ஈமச்சடங்கு உதவி | | 2,000/- |
| 4 | **கல்வி உதவித்தொகை** | | |
| | அ | 10ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,000/- |
| | ஆ | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,000/- |
| | இ | 11ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,000/- |
| | ஈ | 12ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,500/- |
| | உ | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,500/- |
| | ஊ | முறையான பட்டபடிப்பு | 1,500/- ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தல் | 1,750/- ஆண்டுக்கு |
| | எ | முறையான பட்டமேற்படிப்பு | 2,000/- ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தல் | 3,000/- ஆண்டுக்கு |
| | ஏ | தொழில் நுட்பப் பட்டப்படிப்பு | 2,000/- ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தல் | 4,000/- ஆண்டுக்கு |
| | ஐ | தொழில் நுட்பப் பட்ட மேற்படிப்பு | 4,000/- ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தல் | 6,000/- ஆண்டுக்கு |
| | ஒ | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,000/- ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தல் | 1,200/- ஆண்டுக்கு |
| 5 | **திருமண உதவி** | | 2,000/- |
| 6 | **மகப்பேறு உதவி** | | |
| | அ | மகப்பேறு உதவி மாதம் ரூ.1,000/- வீதம் | 6,000/- |
| | ஆ | கருச்சிதைவு / கருக்கலைப்பு | 3,000/- |
| 7 | பழைய கண்கண்ணாடியை மாற்றுவதற்கும் / புதிய கண்கண்ணாடி வாங்கிடவும் உதவி | | 500/-க்கு மிகாமல் |
| 8 | முதியோர் ஓய்வூதியம் | | 1000/- பிரதி மாதம் |

## புதிரை வண்ணார் நல வாரியம்
## நலத்திட்ட உதவிகள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் |
|---|---|---|---|
| 1. | **விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ்** | அ)விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித் தொகை வழங்கப்படும்<br>ஆ) விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப வழங்கப்படும் | நலவாரிய உறுப்பினர் அடையாளஅட்டை |
| 2. | **இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை** | பதிவு பெற்ற உறுப்பினர் இயற்கை மரணம் எய்தினால் உறுப்பினர் இறப்புப் பதிவுச் சான்றிதழ் வாரிய உறுப்பினர் அசல் அடையாள அட்டையுடன் விண்ணப்பிக்க வேண்டும் | நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை |
| 3. | **ஈமச் சடங்கு செலவிற்கான உதவித்தொகை** | பதிவு பெற்ற உறுப்பினர் இயற்கை மரணம் எய்தினால் உறுப்பினர் இறப்புப் பதிவுச் சான்றிதழ் வாரிய உறுப்பினர் அசல் அடையாள அட்டையுடன் விண்ணப்பிக்க வேண்டும் | நலவாரிய உறுப்பினர் அடையாளஅட்டை<br>இறப்பு பதிவு சான்று |
| 4. | **கல்வி உதவித் தொகை** | பதிவு செய்யப்பட்ட உறுப்பினரின் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.<br>கணவன் மற்றும் மனைவி கல்வி உதவித் தொகை கோரி விண்ணப்பித்திருந்தால் இருவரில் ஒருவருக்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்படும்<br>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினரின் மகன்/மகள் நலத்துறையில் வழங்கப்படும் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழும் உதவித் தொகை பெறத் தகுதியுடையவராக இருப்பின், ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் மட்டுமே உதவித் தொகை பெறத் தகுதியுடையவர் ஆவார். | நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை |

| **வ. எண்** | **திட்டத்தின் பெயர் மற்றும் விவரம்** | **உதவி பெறுவதற்குரிய தகுதிகள்** | **மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள்** |
|---|---|---|---|
| 5. | **திருமண உதவித் தொகை** | திருமணச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட வயதை பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும். உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவு பெற்ற உறுப்பினரின் குடும்பத்திற்கு இருமுறை மட்டுமே வழங்கப்படும். உதவித் தொகை கோரி கணவர் அல்லது மனைவி ஆகிய இருவரும் விண்ணப்பித்திருந்தால் இருவரில் ஒருவருக்கு மட்டுமே வழங்கப்படும். | நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை, வயதுச் சான்றிதழ் |
| 6. | **மகப்பேறு உதவித்தொகை** | மருத்துவச் சான்று பெறப்பட வேண்டும். பதிவு பெற்ற பெண் உறுப்பினர் இருமுறை மட்டுமே உதவித்தொகை பெறலாம். அவர்களுக்கு ஏற்கெனவே இரண்டு குழந்தைகள் இருப்பின் இந்த உதவித்தொகை பெற தகுதியற்றவர் ஆவர். | நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை, மருத்துவச் சான்று |
| 7. | **கண் கண்ணாடி செலவுத் தொகையை ஈடு செய்தல்** | பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு ஒரு முறை மட்டுமே உதவித்தொகை வழங்கப்படும். | நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை |
| 8. | **முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும்** | 60 வயது பூர்த்தி அடைந்த முதியோர் மட்டும் தகுதி உடையவர் ஆவார்.<br>60 வயது ஆகாதவர்களுக்கும், வேலை செய்ய இயலாதவர்களுக்கும், வேலை செய்ய உடல் தகுதி பெறாதவர்களுக்கும் ஓய்வூதியம் உண்டு.<br>அவர்கள் சிவில் சர்ஜன் நிலைக்குக் குறையாத மருத்துவ அலுவலரின் சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும். | நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை, மருத்துவச் சான்று |

**வயது வரம்பு:–** 18 வயதிற்கு மேல் ஆனால் 60 வயது நிறைவடையாதவர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ளலாம்

**(இது மேற்கண்ட இரண்டு வாரியத்திற்கும் பொருந்தும்)**

<u>**தொடர்புகொள்ள** வேண்டிய **நபர்**:–</u>

**புதிரை வண்ணார் நல வாரியம் –** மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

## II. பழங்குடியினர் நலன்

**முகவுரை:**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககத்தில் இருந்து பழங்குடியினர் நல இயக்ககம் 01.04.2018 முதல் நிதி மற்றும் நிர்வாக முழு அதிகாரத்துடன் செயல்பட்டு வருகிறது. தமிழக அரசு பழங்குடியினரின் முன்னேற்றத்திற்கு பழங்குடியினர் அதிகமாக வசித்து வரும் 23 மாவட்டங்களில் மிகுந்த முனைப்புடன் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. கல்வி, சுகாதாரம், குடிநீர், சுற்றுச்சூழல் தூய்மை போன்ற அடிப்படை வசதிகளை செய்து தந்து பழங்குடியினர்களை அனைத்து வகைகளிலும் மேம்படுத்தி பழங்குடியினருக்கும் பழங்குடியினர் அல்லாதோருக்கும் இடையே உள்ள இடைவெளியை குறைப்பதற்கும், பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்தல், இணைப்பு சாலை அமைத்தல் மற்றும் வீடுகள் கட்டித் தருதல் ஆகிய திட்டங்கள் மூலம் பழங்குடியினரின் சமூக பொருளாதார நிலையினை உயர்த்துவதும் அரசின் முக்கிய குறிக்கோளாகும்.

**பழங்குடியினர் துணைத்திட்டம்** 1976–77ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகின்றது. இது மாநில அரசின் ஆண்டுத்திட்டத்தின் ஓர் பகுதி திட்டமாகும். மேலும் தமிழ்நாட்டில் உள்ள மொத்த மக்கள் தொகையில் பழங்குடியினர் மக்கள் தொகை அடிப்படையில் 1.1 விழுக்காட்டிற்கு குறையாமல் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் அனைத்து துறைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பழங்குடியினரின் நலனுக்காகவும், வாழ்வாதாரத்திற்காகவும், வேலைவாய்ப்பிற்காகவும் மற்றும் பழங்குடியினர் மக்கள் வாழும் பகுதி உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் பழங்குடியினர் மக்கள் தொகையின் அடிப்படையில் அவர்களுக்கான பயன்கள் இத்திட்ட நிதி ஒதுக்கீடு மூலம் சென்றடைகிறது என்பது உறுதி செய்யப்படுகிறது.

மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் பழங்குடியினர் வாழும் 10 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளைக் கொண்ட சேலம் (ஏற்காடு, பச்சமலை, அருநூத்துமலை மற்றும் கல்ராயன்மலை), நாமக்கல் (கொல்லிமலை), விழுப்புரம் (கல்ராயன்மலை), திருவண்ணாமலை (ஜவ்வாதுமலை), திருச்சிராப்பள்ளி (பச்சமலை), தர்மபுரி (சித்தேரி மலை) மற்றும் திருப்பத்தூர் (ஜவ்வாது மற்றும் ஏலகிரிமலை) ஆகிய 7 மாவட்டங்களில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் 60% நிதி வருவாய் ஈட்டும் திட்டங்களுக்காகவும், 30% அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுக்காகவும் 10% வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கும் **பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவி (SCA to TSS)** செலவிடப்படுகிறது. இத்திட்டத்தின் பெயர் **பிரதம மந்திரியின் பழங்குடியினர் கிராம முன்மாதிரித் திட்டம்** (Pradhan Mantri Aadi Adrash Gram Yojana) **என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.**

பழங்குடியினர் பகுதிகளில் உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும் பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளைப் பராமரிப்பதற்கு **இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுக்கூறு 275(1)** கீழ் நிதி வழங்கப்படுகிறது.

மாநிலத்திலுள்ள 36 வகையான பழங்குடியினரில் 6 வகை பழங்குடியினர், அதாவது தோடா, கோத்தா, குரும்பாஸ், இருளர், பனியர் மற்றும் காட்டுநாயகன் இனத்தவர் **அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினராக (PVTGs)** வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினரின் சமூகம், பொருளாதாரம் மற்றும் கல்வி வளர்ச்சிக்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. மேலும் இவர்களுக்காக பாரம்பரிய வீடு மற்றும் பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல், கறவைமாடு வழங்குதல், குடிநீர் வசதி, தெரு விளக்கு, செங்கல்சூளை அமைத்தல், மீன்பிடி வலை, இருசக்கர வாகனம், சுமை வண்டி வழங்குதல், ஆழ்துளை கிணறு அமைத்தல் போன்ற நலத்திட்டப் பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்** மூலம், பழங்குடியினர் நல மேம்பாட்டு பணிகள், கூரை வீடுகளைச் சீரமைப்பு செய்தல், சமுதாயக் கூடம் கட்டுதல், துரித இலவச மின்இணைப்பு வழங்குதல், சாலைப் பணிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், குடிநீர் வசதி, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பழங்குடியினர் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும், பழங்குடியினர் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூக பொருளாதாரம் மற்றும் கல்வி நிலை முதலியவற்றை ஆராய்ச்சி செய்வதற்காகவும் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் 1983ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில், முத்தரை பாலாடா எனும் இடத்தில் **"பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்"** ஒன்று அமைக்கப்பட்டது. இம்**மையம்** மானுடவியல் நிபுணத்துவம் வாய்ந்த இயக்குநர் ஒருவரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இங்கு நூலகம் ஒன்றும், பழங்குடியினர் அருங்காட்சியகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. பழங்குடியினரின் வாழ்க்கை முறை குறித்த புகைப்படங்கள் மற்றும் கலைப் பொருட்கள் ஆகியன பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

## 2. கல்வி

### (i) பள்ளிகள்/ விடுதிகள்

இத்துறையின் கீழ் இயங்கி வரும் பள்ளிகள் மற்றும் விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணாக்கர் எண்ணிக்கையும் கீழ்வருமாறு:–

| வ. எண். | பள்ளி மற்றும் விடுதிகளின் வகைப்பாடு | எண்ணிக்கை | மாணாக்கர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் | 320 | 28,263 |
| 2. | பழங்குடியினர் நல விடுதிகள் | 48 | 1,972 |
| 3. | ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப்பள்ளிகள் | 8 | 2,890 |

பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் தங்கிப் பயில SC/ST மாணாக்கர்களுக்கு 85% + BC/MBC மாணாக்கர்களுக்கு 10% + Others 5% என்ற விகிதாச்சார முறை பின்பற்றப்படுகிறது.

விடுதிகளில் சேருவதற்கான விண்ணப்பங்கள் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் திட்ட அலுவலரிடம் பெற்று சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்க வேண்டும்.

விடுதிகளில் சேர, மாணவர்களின் இருப்பிடத்திலிருந்து, அவர்கள் பயிலும் பள்ளியானது குறைந்தபட்சம் 5 கி.மீ தொலைவில் இருக்க வேண்டும். இந்நிபந்தனை மாணவியர்களுக்கு பொருந்தாது.

### (ii) கல்வி உதவித் தொகை

சமூக அளவிலும் பொருளாதார அளவிலும் பின்தங்கிய பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களை சமூக, பொருளாதார முன்னேற்றமடைய செய்ய சிறந்த வழி அவர்களுக்கு உரிய கல்வியளித்து அவர்களை சுயசார்புடையவர்களாக மாற்ற வேண்டும் என்ற உயரிய நோக்குடன், பல்வேறு கல்வி உதவித் தொகைத் திட்டங்களை பழங்குடியினர் நலன் சார்ந்த கல்வி உதவித் திட்டங்களை பழங்குடியினர் நலத்துறை செயல்படுத்தி வருகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 2.1 | **பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான (Post Matric) ஒன்றிய அரசு கல்வி உதவித் தொகை திட்டம்.**<br>➢ அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், கல்லூரிகளுக்கு மாணவர்கள் செலுத்த வேண்டிய திருப்பி அளிக்கப்படாத (Non refundable fees) கட்டாயக் கட்டணங்கள் மற்றும் பராமரிப்புத் தொகை ஆகியவை கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.<br>➢ சுயநிதி கல்வி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் பயிலும் பழங்குடியினர் இன மாணவர்களுக்கும் அரசு/நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் பயிலும் பழங்குடியினர் இன மாணாக்கர்களுக்கும் அரசு நியமித்த கட்டணக்குழு / அரசு நிர்ணயிக்கும் கட்டணங்கள் பராமரிப்புப் படியுடன் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.<br>**பராமரிப்பு படிகள்**<br>**1) விடுதியில்அல்லாதோர்**<br>மாதம் ரூ.230/-முதல் ரூ.550/-வரை<br>**2) விடுதியில் உள்ளோர்.**<br>மாதம் ரூ.380/- முதல் ரூ.1200/- வரை | ➢ 11ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படிக்கும் மாணாக்கர்கள்<br>➢ பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சம் (அனைத்து வகை வருமானமும் சேர்த்து கணக்கிடப்படும்)<br>➢ பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு மட்டும் | அ)பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/ கல்லூரி முதல்வர்கள்/ மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.<br>ஆ) இயக்குநர், பழங்குடியினர் நலம் (பிற மாநிலங்களில் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புகளை பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பழங்குடியினர் மாணவர்கள் மட்டும்) |

<table>
<tr>
<td>2.2</td>
<td>ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும் பழங்குடியினர் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை திட்டம்
<table>
<tr><td></td><td>வெளி மாணாக்கர்</td><td>விடுதி மாணாக்கர்</td></tr>
<tr><td colspan="3">பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு)</td></tr>
<tr><td>பழங்குடியினர்</td><td>ரூ.225/-</td><td>ரூ.525/-</td></tr>
<tr><td colspan="3">தனி மானியம் ( ஒரு ஆண்டுக்கு)</td></tr>
<tr><td>பழங்குடியினர்</td><td>ரூ.750/-</td><td>ரூ.1000/-</td></tr>
</table>
</td>
<td>➢ பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமான வரம்பு பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு ரூ.2.50 இலட்சம்<br>➢ அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 9 மற்றும் 10ஆம் வகுப்புகளில் பயிலும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு மட்டும்</td>
<td>பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.</td>
</tr>
</table>

**(iii) ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள்:**

**ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள்** 1998-1999 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகள் "தமிழ்நாடு பழங்குடியினர் நல உண்டி உறைவிட மற்றும் கல்வி நிறுவனங்களின் சங்கம்" என்ற அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் பழங்குடியினர் மாணக்கர்களின் கல்வி தரத்தை உயர்த்தும் பொருட்டு செயல்பட்டு வருகின்றன.

<table>
<tr><th>வ. எண்</th><th>மாவட்டம்</th><th>இடம்</th><th>தொடர்புகொள்ள வேண்டிய நபர்</th></tr>
<tr><td>1</td><td>கள்ளக்குறிச்சி</td><td>வெள்ளிமலை</td><td rowspan="8">தலைமை ஆசிரியர்கள்/ மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்/ மாவட்ட பழங்குடியினர் நல அலுவலர்கள்.</td></tr>
<tr><td>2</td><td>சேலம்</td><td>அபிநவம்</td></tr>
<tr><td>3</td><td>நீலகிரி</td><td>மு.பாலடா</td></tr>
<tr><td>4</td><td>நாமக்கல்</td><td>செங்கரை</td></tr>
<tr><td>5</td><td>திருவண்ணாம லை</td><td>அத்திப்பட்டு</td></tr>
<tr><td>6</td><td>திருப்பத்தூர்</td><td>புதூர்நாடு</td></tr>
<tr><td>7</td><td>செங்கல்பட்டு</td><td>பட்டிப்புலம்</td></tr>
<tr><td>8</td><td>சேலம்</td><td>ஏற்காடு</td></tr>
</table>

**3. பழங்குடியினர் நலத் திட்டங்கள் :**

**(i) ஒன்றிய அரசின் திட்டங்கள் :**

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 3.1 | **இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுக்கூறு 275(1)**<br>உட்கட்டமைப்பு பணிகள், பழங்குடியினர்களுக்கான வாழ்வாதார நலத் திட்டங்கள். | ➢ பழங்குடியினராக இருக்க வேண்டும். | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / பழங்குடியினர் நல திட்ட அலுவலர் |
| 3.2 | அழிவின் **விளிம்பிலுள்ள பழங்குடியினர் மேம்பாடு (PVTG)**<br>அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியின மக்களுக்கென்று<br>i. இலவச வீடுகள் கட்டுதல்<br>ii. சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாடு<br>iii. சமையலறைத் தோட்டங்கள் அமைப்பதற்கு<br>iv. கறவை மாடுகள் வழங்குதல்<br>v. மீனவர்களுக்கு மீன்பிடி வலை மற்றும் இரு சக்கர வாகனங்கள் வழங்குதல்<br>vi. குடிநீர் வசதி<br>vii. தெருவிளக்குகள் அமைத்தல் போன்ற வசதிகள் செய்யப்படுகின்றன.<br>viii. அடிப்படை ஆய்வு.<br>ix. பழங்குடியின விவசாயிகளுக்கு பவர்டில்லர் வழங்குதல்<br>x. பழங்குடியின இளைஞர்களுக்கு ஓட்டுனர் பயிற்சி அளித்தல் மற்றும் ஓட்டுனர் உரிமம் வழங்குதல் | ➢ தோடா, கோட்டா, குரும்பாஸ், இருளர், பணியன் மற்றும் காட்டுநாயகன் ஆகிய பழங்குடியினராக இருக்க வேண்டும்.<br>➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் இருக்க வேண்டும். | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / பழங்குடியினர் நல திட்ட அலுவலர் மூலமாக முன்மொழிவுகள் வரப்பெறவேண்டும். |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 3.3 | **பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு ஒன்றிய நிதியுதவி – (இத்திட்டம் பிரதம மந்திரியின் பழங்குடியினர் கிராம முன்மாதிரித் திட்டம்** (Pradhan Mantri Aadi Adrash Gram Yojana) **என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது)**<br>**i.** பழங்குடியின குழுக்களுக்கு கறவை மாடுகள் வழங்கப்படுவதுடன், சில பொருளாதார திட்டங்களும் வழங்கப்படுகின்றன.<br>**ii.** பழங்குடியினர் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சிறுதொழில்கள் செய்வதற்கு உற்பத்தி அலகுகள் அமைத்தல்.<br>**iii.** சுற்றுலா மேம்படுத்துதல்.<br>**iv.** காலனி மற்றும் துணி உற்பத்தி நிலையம் அமைத்தல்.<br>**v.** தையல் இயந்திரங்கள் வழங்குதல்.<br>**vi.** நான்கு சக்கர மற்றும் இரு சக்கர அவசர ஊர்தி (Ambulance), மருத்துவ கருவிகள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வழங்குதல்<br>**vii.** மருத்துவ மூலிகைத் தோட்ட பண்ணை அமைத்தல். | ➢ பழங்குடியினராக இருக்கவேண்டும்.<br>➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் இருக்க வேண்டும்.<br>➢ கறவை மாடுகள் வாங்குவதற்கு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு மட்டுமே பாலை விநியோகம் செய்வோம் என்ற உறுதிமொழி பெற்ற குழுவாக இருக்க வேண்டும். | மாவட்ட ஆட்சியர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / பழங்குடியினர் நல திட்ட அலுவலர் துறைத்தலைவர் மூலமாக முன்மொழிவுகள் வரப்பெறவேண்டும். |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 3.4 | **வந்தன் விகாஸ் கேந்திரம் காரிய கிராம்**<br>பழங்குடியினர் தலைமையின் கீழ் வந்தன் விகாஸ் கேந்திரம் (Vandhan Vikas Kendhra (VDVK)) 10 சுய உதவி குழுக்களை கொண்டு அமைக்கப்படுகிறது. சிறுவன உற்பத்தி சேகரித்தல், மதிப்பு கூட்டுதல் போன்றவற்றில் சுய உதவிக் குழு ஈடுபடுகிறது. | ➢ பழங்குடியினர் பகுதிகளில் பழங்குடியின மக்களுக்காக நடத்தப்படும் தொண்டு நிறுவனங்கள்<br>➢ சுய உதவிக்குழு<br>➢ சிறுவன உற்பத்தியாளர்கள் | மாவட்ட ஆட்சியர்<br>மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர்/<br>திட்ட அலுவலர் (பகுந)<br>இணைப் பதிவாளர், கூட்டுறவுச் சங்கங்கள். |
| 3.5 | **சிறுவன உற்பத்திக்கு குறைந்தபட்ச விலை(MSP for MFP)**<br>பழங்குடியினர் வனத்தில் சேகரிக்கும் சிறுவன உற்பத்தி பொருட்களுக்கும் மற்றும் விவசாய பொருட்களுக்கும் அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச விலையை பயனாளிகளுக்கு வழுங்கி விலை பொருட்களை கொள்முதல் மேற்கொள்ளுதல் | ➢ பழங்குடியின சிறுவன உற்பத்தியாளர்கள் | மாவட்ட ஆட்சியர்<br>மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் / திட்ட அலுவலர் (பகுந) இணைப் பதிவாளர், கூட்டுறவுச் சங்கங்கள். |
| **3(ii)** | **<u>மாநில அரசின் திட்டங்கள் :</u>** | | |
| 3.6 | **விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்:**<br>இத்திட்டத்தின் மூலம் பழங்குடியினர் நல மேம்பாட்டுப் பணிகள், கூரை வீடுகளை சீரமைப்பு செய்தல், சாலைப் பணிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், குடிநீர் வசதி, பொருளாதாரம் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன | ➢ பழங்குடியினராக இருக்கவேண்டும்.<br>➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் இருக்க வேண்டும். | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்/ பழங்குடியினர் நல திட்ட அலுவலர் /<br>மேலாண்மை இயக்குநர் மற்றும் மாவட்ட மேலாளர்கள் தாட்கோ . |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 3.7 | அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வி பயிலும் பழங்குடியின மாணவ/மாணவியர் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு தேர்ச்சி பெற்றவுடன், அவர்களது விருப்பத்தின் அடிப்படையில் தனியார் பயிற்சி நிலையங்களில் கல்வியியல் பட்டயப்படிப்பில் (D.T.Ed.,) சேர்த்து பழங்குடியின மாணாக்கர்களை பயில வைப்பதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.<br>ஆண்டிற்கு 100 மாணவர்களுக்கு கல்வியியல் பட்டயப் படிப்பு பயில்வதற்கு ஆகும் கல்விக் கட்டணம், புத்தகக் கட்டணம், விடுதிக் கட்டணம், சீருடைக் கட்டணம் மற்றும் இதரச் செலவினங்கள் மூலம் ஏற்படும் செலவினங்கள் முழுவதையும் அரசே ஏற்கும். | ➢ அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வி பயின்ற பழங்குடியின மாணாக்கர்கள் 40% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். | இயக்குநர், பழங்குடியினர் நலம் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்/ பழங்குடியினர் நல திட்ட அலுவலர். |
| 3.8 | அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 100 பழங்குடியின மாணாக்கர்களுக்கு, 2020-21 ஆம் கல்வியாண்டில் 3 ஆண்டு செவிலியர் பயிற்சி மையங்களில் செவியலியர் பட்டயப் படிப்பு (DGNM/Diploma in General Nursiing and Midwifery Course) அளிக்கப்படுகிறது. | ➢ 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பழங்குடியின மாணவர்கள் 40% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / திட்ட அலுவலர். |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 3.9 | பழங்குடியின மக்கள் வசிக்குமிடங்களில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்<br>➢ வீடு கட்டித்தருதல்<br>➢ குடிநீர் வசதி ஏற்படுத்தி தருதல்<br>➢ இணைப்பு சாலை மற்றும் பாதைகள் அமைத்தல்<br>➢ தெரு விளக்கு/சூரிய மின் விளக்கு அமைத்து தருதல் | ➢ பழங்குடியினர் குடியிருப்பு பகுதிகள் | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / பழங்குடியினர் நல திட்ட அலுவலர்/ ஊராட்சி முகமை / முதன்மை தலைமை வன பாதுகாப்பாளர். |
| 3.10 | **பழங்குடியினர்களின் விவசாயம் மேம்பட பாசன வசதி செய்து தருதல்**<br>➢ ஆழ்துளை கிணறு<br>➢ திறந்த கிணறு,<br>➢ சொட்டுநீர் பாசனம்,<br>➢ தெளிப்புநீர் பாசனம்,<br>➢ குழாய்த் தொடரமைப்பு,<br>➢ எண்ணெய் பிழியும் இயந்திரம்,<br>➢ மின்னாற்றல் இயந்திரம்,<br>➢ கதிரொளி விசைக்குழாய் அமைத்துத் தருதல் | ➢ பழங்குடியினராக இருக்கவேண்டும்<br>➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் இருக்க வேண்டும். | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / பழங்குடியினர் நல திட்ட அலுவலர் |
| 3.11 | **தொழிற்பயிற்சி மையங்கள்**<br>பழங்குடியினருக்கென தொழிற்பயிற்சி மையங்கள் சேலம் மாவட்டம் கருமந்துறை, நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை, திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமரத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைக்கட்டி, நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் கள்ளகுறிச்சி மாவட்டம் சங்கராபுரம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. | ➢ பழங்குடியினராக இருக்க வேண்டும் | ➢ கல்லூரி முதல்வர்<br>➢ மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்<br>➢ மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / பழங்குடியினர் நல திட்ட அலுவலர் |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 3.12 | **தெருவிளக்கு அமைத்தல்**<br>பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு தெருவிளக்கு அமைத்தல் | தெருவிளக்கு இல்லாத பழங்குடியினர் குடியிருப்பு | ➢ கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம்<br>➢ வட்டார வளர்ச்சி அலுவலர்<br>➢ சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலர். |
| 3.13 | **இணைப்புச் சாலைகள் அமைத்தல்**<br>பழங்குடியினர் குடியிருப்புகளை முக்கிய கிராமத்துடன் அல்லது சமவெளியுடன் இணைத்தல் | தற்பொழுது சாலை வசதி இல்லாத கிராமம் | ➢ செயற்பொறியாளர், தேசிய நெடுஞ்சாலைத் துறை<br>➢ மாவட்ட ஆட்சியர்.<br>➢ வட்டார வளர்ச்சி அலுவலர்<br>➢ சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் |
| 3.14 | **இலவசமாக வீடுகள் கட்டித்தருதல்**<br>மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதிகளில் வாழும் வீடு இல்லாத பழங்குடியினர்களுக்கு வீடுகள் கட்டித்தருதல். | வீட்டுமனைப் பட்டா உள்ள பழங்குடியினர் | ➢ சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்<br>➢ இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை–05<br>➢ மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / திட்ட அலுவலர் (பகுந)<br>➢ ஊராட்சி ஒன்றிய அலுவலர்<br>➢ வட்டார வளர்ச்சி அலுவலர் |
| 3.15 | **வேலைவாய்ப்பு ஆலோசனைகள்**<br>பழங்குடியின இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்குரிய உதவிகள், ஆலோசனைகள் நல்க ஒரு தொழில் நெறி வழிகாட்டும் மையம் உதகமண்டலத்தில் இயங்கி வருகிறது. | பழங்குடியின இளைஞர்கள் | சிறப்பு வேலை வாய்ப்புக்கான ஆலோசனை மையத்திலுள்ள வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அலுவலர், உதகமண்டலம். |
| 3.16 | **வேலைவாய்ப்புப் பயிற்சி அளித்தல்**<br>போதிய கல்வி பயின்ற பழங்குடியின இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பயிற்சி அளித்தல். | வேலையில்லாத பழங்குடியின இளைஞர்கள் | பயிற்சிக்கான வழிகாட்டிக்கு தொடர்புடைய மாவட்ட வேலை வாய்ப்பு மையங்கள் |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 3.17 | **பெண்கள் முன்னேற்றத்திற்கு பயிற்சி அளித்தல்**<br>பெண்களுக்கு தையல் பயிற்சி, மூங்கில் கூடை முடைதல் போன்ற பயிற்சி அளித்தல். | பழங்குடியினப் பெண்கள் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர்/ பழங்குடியினர் நல திட்ட அலுவலர் |
| 3.18 | **தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி**<br>பழங்குடியின மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்குவதை இலக்காக கொண்டு அரசுடன் இணைந்து செயல்படக்கூடிய சேவை எண்ணம் கொண்ட தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டம். | பழங்குடியினர் பகுதிகளில் பழங்குடியினர் மாணவர்களுக்காக தொண்டு நிறுவனங்கள் நடைபெறும் பள்ளிகள் | ➢ மாவட்ட ஆட்சியர்<br>➢ மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர்/ பழங்குடியினர் நல திட்ட அலுவலர் |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 3.19 | **சிறப்பு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**<br>ஒன்றிய அரசு வரவு செலவு திட்டம் 2015–16 இல் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (HADP) மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களை 2015–16–ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசின் நிதி உதவி வழங்குவதிலிருந்து பிரிக்கப்பட்டு மாநில அரசின் நிதிஆதாரங்களின் மூலம் தொடர முடிவு எடுக்கப்பட்டு அவ்வாறே மாநில அரசு 2015–16 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட அறிக்கையில் ரூ.75.00 கோடி மதிப்பீட்டில் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் (SADP) அறிவிக்கப்பட்டது.<br>1. திறன் மேம்பாட்டுத் திட்டம் மூலம் வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல்<br>2. கிராமங்களில் உயிரி சார்ந்த நிறுவனங்கள் ஏற்படுத்துதல்.<br>3. மலைவாழ் மக்கள் வாழும் குடியிருப்புகளுக்கு பாதுகாப்பான சுகாதாரமான குடித்தண்ணீர் வசதி ஏற்படுத்துதல். | பழங்குடியினராக இருக்க வேண்டும். | ➢ மாவட்ட ஆட்சியர்<br>➢ திட்ட அலுவலர், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்<br>➢ மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / பழங்குடியினர் நல திட்ட அலுவலர் திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| 3.20 | **போட்டித் தேர்வுக்கு இலவச பயிற்சி அளித்தல்**<br>போதிய கல்வி பயின்ற பழங்குடியின மாணாக்கர்களுக்கு TNPSC போன்ற அரசு போட்டி தேர்வுகளுக்கு இலவச பயிற்சி அளித்தல். | பழங்குடியின இளைஞர்கள் | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் / பழங்குடியினர் நல திட்ட அலுவலர் |
| 3.21 | **பழங்குடியின நாட்டு வைத்தியர்களுக்கு பயிற்சி சான்று வழங்குதல்** | பழங்குடியின நாட்டு வைத்தியர்கள் | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர்/ பழங்குடியினர் நல திட்ட அலுவலர் |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 3.22 | **இலவச துரித மின்சேவை வழங்குதல்** | பழங்குடியினர்கள் | மாவட்ட மேலாளர், தாட்கோ மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் / பழங்குடியினர் நல திட்ட அலுவலர் |
| 3.23 | **தோட்டக்கலை மேம்பாடு**<br>➢ மரக்கன்றுகள்<br>➢ விதைகள்<br>➢ உரம் இலவசமாக வழங்கப் படுகின்றன. | ஒரு ஏக்கர் நிலம் உள்ள பழங்குடியினர். | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி / துணை இயக்குநர் தோட்டக்கலைத் துறை |
| 3.24 | **பட்டுப்பூச்சி வளர்ப்புத்திட்டம்**<br>➢ மல்பெரிதோட்டம் ஏற்படுத்தவும்<br>➢ பட்டுப்புழு வளர்க்கவும் முழுமான்யம் அளிக்கப்படுகிறது. | அரை (1/2) ஏக்கர் நிலம் உள்ள பழங்குடியினர். | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி / துணை இயக்குநர் பட்டுவளர்ச்சித்துறை |
| 3.25 | **சிறிய நீர்ப்பாசனத் திட்டம்**<br>பழங்குடியினர் பகுதிகளில் சிறிய நீர்த்தேக்க அணை, நீர்தெளிப்பான் போன்றவை ஏற்படுத்தல். | பயன்பெறுவோரில் 50 விழுக்காட்டிற்கு மேல் பழங்குடியினராக இருக்க வேண்டும். | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் செயற்பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு / பொதுப் பணித்துறை. |
| 3.26 | **கால்நடை பராமரிப்பு**<br>➢ ஆடுகள்<br>➢ கறவை மாடுகள் வாங்கி வளர்க்க முழு மானியம் வழங்கப்படுகின்றது.<br>➢ கால்நடைகளுக்கு மருத்துவ வசதி, செயற்கை கருவூட்டல் போன்றவைகளும் செய்யப்படுகின்றன | பழங்குடியினர்களாக இருக்க வேண்டும் | ➢ மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / பழங்குடியினர் நல திட்ட அலுவலர்<br>➢ இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை.<br>➢ சம்மந்தப்பட்ட கால்நடை மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர் கால்நடை ஆய்வாளர் |
| 3.27 | **விவசாய நில மேம்பாடு**<br>மலைச்சரிவில் உள்ள நிலத்தை மழை நீர் அடித்துச் செல்லாமல் தடுத்து விவசாயம் செய்ய வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்தல் இவை முழுவதும் இலவசமாக செய்து தரப்படுகின்றன. | விவசாய நிலமுடைய பழங்குடியினர். | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவிப் பொறியாளர் வேளாண்மைப்பொறியியல் துறை. |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 3.28 | **தேனீ வளர்ப்பு**<br>தேன் சேகரிப்பதன் மூலம் வருமானத்தை அதிகரிக்க தேன் பெட்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. | வனப்பகுதிகளில் வாழும் பழங்குடியினர். | உதவி / துணை இயக்குநர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராம கைத்தொழில் வாரியம். |
| 3.29 | **வனவளப் பாதுகாப்புத் திட்டம்**<br>➢ வனவளத்தை அதிகரிக்க செடிகள் வழங்குதல்<br>➢ செடிகளைப் பராமரிக்க ஊக்கத்தொகை வழங்குதல் | வனப்பகுதியில் வாழும் பழங்குடியினர். | சம்பந்தப்பட்ட மாவட்ட வனத்துறை அலுவலர். |
| 3.30 | **பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்**<br>➢ பழங்குடியினருக்கு வட்டியில்லாக்கடன் வழங்குதல்<br>➢ அவர்கள் விளை பொருள்களை நல்ல விலைக்கு விற்பனை செய்தல்.<br>➢ அரிசி, உப்பு, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்களை நியாய விலையில் வழங்குதல்.<br>➢ விவசாயத்திற்குத் தேவையான இடுபொருட்களை நியாய விலையில் விநியோகம் செய்தல்.<br>➢ பொருளாதாரத் திட்டங்களுக்கு கடன் போன்றவை பெறும் பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் (LAMPS) மூலம் வழங்குதல். | பழங்குடியினராக இருக்க வேண்டும். | ➢ சம்பந்தப்பட்ட மாவட்ட வனத்துறை அலுவலர்<br>➢ இணை பதிவாளர், பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம். |

**4. பழங்குடியினர் நல வாரியம்:**

தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியின மக்கள் சமூக, பொருளாதார கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென அவர்களுக்கு தனியாக ஒரு வாரியம் ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு பழங்குடியினருக்கான நல வாரியம் அரசாணை (நிலை) எண்.48 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே–1(2) துறை, நாள்.20.40.2007

**வாரியத்தின் திட்ட உதவிகள்**

| வ. எண். | பொருள் | | ரூபாய் |
|---|---|---|---|
| 1. | அ | விபத்து இறப்பு | 1,00,000 |
| | ஆ | விபத்து ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கு ஏற்ப | 10,000 முதல் 1,00,000 வரை |
| 2. | இயற்கை மரண உதவி | | 20,000 |
| 3. | ஈமச்சடங்கு உதவி | | 5,000 |
| 4. | | கல்வி உதவித் தொகை | |
| 5. | அ. | 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,000 |
| | ஆ | 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர் | 1,000 |
| | இ | 11ம் வகுப்பு படித்து வரும் (பெண்களுக்கு மட்டும்) | 1,000 |
| | ஈ | 12 ம் வகுப்பு படித்து வரும் (பெண்களுக்கு மட்டும்) | 1,500 |
| | உ | 12 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர் | 1,500 |
| | ஊ | 1. முறையான பட்ட படிப்பிற்கு | 1,500 |
| | | 2. விடுதியில் தங்கிப் படித்தால் | 1,750 |
| | எ. | 1.முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 2,000 |
| | | 2.விடுதியில் தங்கிப் படித்தால் | 3,000 |
| | ஏ. | தொழில்நுட்பப் பட்டபடிப்பு | 2,000 |
| | | விடுதியில் தங்கிப் படித்தால் | 4,000 |
| | ஐ. | தொழில்நுட்பப் பட்ட மேற்படிப்பிற்கு | 4,000 |
| | | விடுதியில் தங்கிப் படித்தால் | 6,000 |
| | ஒ | ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பிற்கு | 1,000 |
| | | விடுதியில் தங்கிப் படித்தால் | 1,200 |
| 6. | திருமண உதவி | | 2,000 |
| 7. | அ.மகப்பேறு உதவி மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/– வீதம் 6 மாதங்களுக்கு | | 6,000 |
| | ஆ.கருச்சிதைவு / கருக்கலைப்பு | | 3,000 |
| 8. | கண்கண்ணாடி வாங்கிட உதவி | | 500/– க்கு மிகாமல் |
| 9. | முதியோர் ஓய்வூதியம் | | 1,000 |

**நிபந்தனைகள்**

- பதிவு செய்பவர் 18 வயது நிறைவு பெற்றவராகவும் 65 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- பதிவு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும்
- அடையாள அட்டை தவறினால் ரூ.20/– செலுத்தி நகல் அட்டையை பெற்றுக் கொள்ள வேண்டும்.
- குடியிருக்கும் இடம் மாறும் போது, புதிய முகவரியை வாரியத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.
- வாரிய உறுப்பினர் திருமணமானபின் அசல் விண்ணப்பத்தில் நியமனதாரரை மாற்ற வாரியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- வாரிய உறுப்பினரின் இயற்கை மரண நிதி உதவி கோரும் விண்ணப்பத்துடன் அசல் அடையாள அட்டையை வாரியத்தில் ஒப்படைக்க வேண்டும்.
- நிதி உதவி கோரும் ஒவ்வொரு நிகழ்விலும் அசல் அடையாள அட்டை கேட்பு மனுவுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
- நிதி உதவிகோரும் விண்ணப்பங்கள் மற்றும் இணைப்புகள் தொடர்புடைய திட்ட அலுவலர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் வழியாக இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

**நிதி உதவி பெறுதவற்கு இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

1. திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் பரிந்துரை கடிதம்.
2. பழங்குடியினர் நல வாரிய அட்டை
3. சாதிசான்றிதழ்
4. குடும்ப அட்டை
5. இறப்பு சான்றிதழ்
6. முதல் தகவல் அறிக்கை (FIR) நகல் விபத்து மரணத்திற்கு மட்டும்.

**5. பொதுத் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005**

**பழங்குடியினர் நல இயக்குநரகம்**

| வ. எண். | தகவல் அலுவலர் | பதவியின் பெயர் | தொர்பு கொள்ள வேண்டியவர்களின் முகவரி மற்றும் தொலைபேசி எண். |
|---|---|---|---|
| 1 | பொதுத் தகவல் அலுவலர் | இணை இயக்குநர் (பொது) | 044–28584370 |
| 2 | மேல்முறையீட்டு அலுவலர் | இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை | 044 – 28516689 |

**மாவட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலகங்கள்**

| வ.எண். | தகவல் அலுவலர் | பதவியின் பெயர் |
|---|---|---|
| 1 | பொதுத் தகவல் அலுவலர் | கண்காணிப்பாளர் |
| 2 | மேல்முறையீட்டு அலுவலர் | திட்ட அலுவலர், பழங்குடியினர் நலம். |

6. <u>பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) 2006 சட்டத்தைச் செயல்படுத்துதல்</u>

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 6.1 | **பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) 2006 சட்டத்தைச் செயல்படுத்துதல்.**<br>➢ அதிகபட்சம் 10 ஏக்கர் நிலம் தனிநபர் உரிமையாக வழங்கப்படுகிறது.<br>➢ வனங்களில் உள்ள கிராமங்களுக்கு பல்வகையான உரிமைகள் அடங்கிய சமுதாய உரிமை வழங்கப்படுகிறது. | ➢ 13.12.2005 ஆம் தேதிக்கு முன்பு வனங்களில் குடியிருக்கும் பழங்குடியினராக இருக்க வேண்டும்.<br>➢ 13.12.2005 ஆம் தேதிக்கு முன்பு மூன்று தலைமுறைகளாக வனங்களில் வாழ்பவராக இருக்க வேண்டும்<br>➢ அதாவது 75 ஆண்டுகள் வனங்களில் குடியிருக்கும் பிற மரபு வழியினராக இருக்க வேண்டும் | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / திட்ட அலுவலர் (பகுந).<br>சபையின் வன உரிமைக்குழு |

## 7. (அ). பழங்குடியினர் இனத்தவர் பட்டியல் (LIST OF SCHEDULED TRIBES)

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணைகள் (திருத்தம்) சட்டம், 1976–ன்படி 36 வகை பழங்குடியினர் தமிழகத்தில் உள்ளனர். அவர்கள் பின்வருமாறு :**

(1) ஆதியன்
(2) அரநாடன்
(3) இரவலன்
(4) இருளர்
(5) காடர்
(6) கம்மாரா**
(7) காணிக்காரன், கணிக்கர்*
(8) கணியன், கண்யன்
(9) காட்டுநாயகன்
(10) கொச்சு வேலன்
(11) கொண்டா காப்புஸ்
(12) கொண்டாரெட்டிஸ்
(13) கொரகா
(14) கோட்டா**
(15) குடியா, மேலக்குடி
(16) குறிச்சான்
(17) குறும்பாஸ் (நீலகிரி மாவட்டத்தில்)
(18) குருமன்ஸ்
(19) மஹா மலசர்
(20) மலை அரையன்
(21) மலை பண்டாரம்
(22) மலை வேடன்
(23) மலக்குறவன்
(24) மலசர்
(25) மலையாளி (தருமபுரி, வட ஆற்காடு, புதுக்கோட்டை, சேலம், தென்னாற்காடு மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில்)
(26) மலேயகண்டி
(27) மன்னான்
(28) முதுகர், முதுவன்
(29) முத்துவன்
(30) பள்ளேயன்
(31) பள்ளியன்
(32) பள்ளியர்
(33) பணியன்
(34) சோழகா
(35) தோடா**
(36) ஊராளி

**(*கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்)**
**(**கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை நீங்கலாக)**

(*****அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர்** தோடா, கோட்டா, குரும்பாஸ், இருளர், பணியன் மற்றும் காட்டுநாயகன் )

### 7. (ஆ) பழங்குடியினர் சாதிச்சான்று மெய்த்தன்மை அறிதல்

உச்சநீதிமன்ற உரிமையியல் மேல்முறையீட்டு எண்.5854/94, நாள்.02.09.1994–இல் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட சாதி சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய, மாநில அளவில் மூன்று கூர்நோக்குக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களின் அமைப்பு விவரம் பின்வருமாறு:

### மாநில அளவிலான கூர்நோக்கு குழு

<table>
<tr><td>1</td><td>அரசு முதன்மைச் செயலாளர் / அரசு கூடுதல் செயலாளர்கள். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை</td><td>தலைவர்</td><td rowspan="3">பழங்குடியினர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கும். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியல் அமைப்புச்சட்டக்கூறு 226–இன்படி சென்னை உயர் நீதிமன்றத்திலும், சட்டக்கூறு 136–இன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.</td></tr>
<tr><td>2</td><td>இயக்குநர், பழங்குடியினர் நலம் / துணை வனப் பாதுகாவலர்கள்</td><td>உறுப்பினர் செயலர்</td></tr>
<tr><td>3</td><td>இயக்குநர், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் / மானுடவியல் வல்லுநர்கள்</td><td>உறுப்பினர்</td></tr>
</table>

### 8.மாவட்ட திட்ட (பழங்குடியினர் நலம்) அலுவலகங்களின் முகவரி மற்றும் தொலைபேசி எண்

| வ. எண் | முகவரி | அலுவலக தொலைபேசி எண் | CUG NO. | E–Mail ID |
|---|---|---|---|---|
| 1. | திட்ட அலுவலகம்,<br>பழங்குடியினர் நலம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தருமபுரி –636 705. | 04342–292732 | 93840 47482 | potribaldpi@gmail.com |
| 2. | திட்ட அலுவலகம்,<br>பழங்குடியினர் நலம்,<br>தனி வட்டாட்சியர் அலுவலகம்,<br>துறையூர்–621 010,<br>திருச்சி மாவட்டம். | 0461–2340607 | 93840 47486 | potribaltry@gmail.com |

| வ. எண். | முகவரி | அலுவலக தொலைபேசி எண் | CUG NO. | E–Mail ID |
|---|---|---|---|---|
| 3. | திட்ட அலுவலகம்,<br>பழங்குடியினர் நலம்,<br>அறை எண்.415 மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>சேலம் – 636 001. | 0427–<br>2450241 | 93840<br>47468 | poslm2017@gmail.com |
| 4 | திட்ட அலுவலகம்,<br>பழங்குடியினர் நலம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>(தரை தளம்),<br>மாவட்ட ஆட்சியரகம்,<br>திருவண்ணாமலை – 606 604. | 04175–<br>232915 | 93840<br>47464 | potwtvm@gmail.com |
| 5. | திட்ட அலுவலகம்,<br>பழங்குடியினர் நலம்,<br>வட்டாட்சியர் அலுவலகம் (முதல் மாடி), செம்மேடு,<br>கொல்லிமலை வட்டம்,<br>நாமக்கல் – 637 411. | 04329–<br>228155 | 93840<br>47460 | pokhnkl@gmail.com |
| 6. | திட்ட அலுவலகம்,<br>பழங்குடியினர் நலம்,<br>வட்டாட்சியர் அலுவலக வளாகம்,<br>கள்ளக்குறிச்சி – 606 202, | 04146–<br>222954 | 93840<br>47454 | potribalvpm@gmail.com |
| 7. | திட்ட அலுவலகம்,<br>பழங்குடியினர் நலம்,<br>தனி வட்டாட்சியர் (ஆதிந) வளாகம்,<br>கிருஷ்ணகிரி மெயின் ரோடு,<br>திருப்பத்தூர் – 635 601, | 04179–<br>220095 | 93840<br>47490 | potwvlr@gmail.com |

## 9. பழங்குடியினர் நல இணையதள சேவைகளின் விவரங்கள்

| வ. எண் | இணையதள முகவரி | பயன்பாடு |
|---|---|---|
| 1 | http:escholarship.tn.gov.in | கல்வி உதவித் தொகைத் திட்டம். |
| 2 | tn.tribalwelfare.tn.gov.in | பழங்குடியினர் நலத்துறை பற்றி தெரிந்து கொள்ள. |
| 3 | tntwd.org.in | நலத் திட்டங்களுக்கு விண்ணப்பம் செய்ய. |

# தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

**முகவுரை:**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), 1974 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர்களுக்கு தீப்பிடிக்காத வீடுகள் கட்டுவதற்காக இந்திய நிறுவனச்சட்டம், 1956இன் கீழ் நிறுவப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்காக பல்வேறு நலத்திட்டங்கள் இந்நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்பால் அரசின் அணுகுமுறை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அனைவரும் பயன் பெறத்தக்க நிலையில், குறிப்பாக கல்வி மற்றும் அடிப்படைத் தேவைகளின் கட்டமைப்பு வசதிகளை வலுவூட்டிடும் வகையில் இருமுனைப்பாங்கானதாக அமைந்துள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் சமுதாய மற்றும் பொருளாதார நிலையில் மேம்பாடு அடையச் செய்வது, இந்நிறுவனத்தின் தலையாய நோக்கமாகும். இதன் தொடர்ச்சியாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரிடையே தொடர்ச்சியான சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்திடும் வகையில், பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த கீழ்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கான பள்ளிகள், விடுதி கட்டடங்கள், குடிநீர், கழிப்பறை வசதிகள் உருவாக்கிடுதல்.
- வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்கள், கொத்தடிமைகள் மற்றும் தூய்மைப் பணியாளர் நலன்களைக் கருத்தில் கொண்டு சுய வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டங்கள் மூலமாக ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தினை உறுதி செய்தல்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் தொழில் முனைவோர் மேம்பாட்டிற்கான மான்யத்துடன் கூடிய கடன் திட்டங்களை செயல் படுத்துதல்.

## 1. பொருளாதார முன்னேற்ற திட்டங்கள்

### 1.1 ஆதிதிராவிடருக்கான பொருளாதார முன்னேற்ற திட்டங்கள்

- ஆதிதிராவிடர் சமூகத்தின் நில உடைமையினை அதிகரிக்கவும், நில உடைமையே மகளிரது சமூக நிலை உயர்வினை காட்டும் அளவுகோல் என்பதாலும் மகளிருக்கான சிறப்புத் திட்டமாக **நிலம் வாங்கும் திட்டம்** 2004–05 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த நில உரிமையாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற வகை செய்யப்பட்டுள்ளது. நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவதன் மூலம் நில பயன்பாடு மற்றும் நிலத்தின்வழி வருவாயை பெருக்குதலே **நில மேம்பாட்டுத் திட்டத்தின்** நோக்கமாகும்.
- வறிய நிலையைக் குறைக்க 18 வயது முதல் 65 வயது வரை உள்ள தனி நபர்கள் மற்றும் குழுக்கள் பயன் பெறும் வகையில் பல்வேறு தொழில்களுக்கு நிதியுதவி **தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் மூலம் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.2.25 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.**
- படித்த வேலையற்ற 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட ஆதி திராவிட இளைஞர்கள் தங்களுக்குத் விருப்பமான அனுபவமுள்ள தொழில் செய்ய **இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் மான்யமாக 30 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.2.25 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.**
- வருமானம் ஈட்டக்கூடிய தொழிலினைச் செய்வதற்கு திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் 50 விழுக்காடு திட்டத்தொகை அல்லது அதிகபட்சம் ரூ.2.50 இலட்சம் வரை மானியமாக **மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கானப் பொருளாதார கடன் உதவித் திட்டத்தின் வழியாக** வழங்கப்படுகிறது.
- ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கு தகுதியான வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், சந்தைகேற்ப பணிவாய்ப்பு பெறும் வகையில் தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டு, பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன.

| ஆதிதிராவிடர்களுக்காக தாட்கோவில் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|
| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **திட்டத்தின் விவரம்** | **தகுதி** | **தொடர்புகொள்ள வேண்டிய நபர்** |
| 1.அ. | **நிலம் வாங்குதல் திட்டம்** | இத்திட்டம் ஆதி திராவிடர் மக்களின்நில உடைமையினை அதிகரிக்கும் பொருட்டும், ஆதி திராவிடர் மகளிரின் சமூக அந்தஸ்தை உயர்த்தும் நோக்கத்தோடும் உருவாக்கப்பட்டுள்ளது.<br>➢ திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிக பட்சமாக 30% வீதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.<br>➢ இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவு கட்டணத்தில் முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.<br>➢ இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் முன்விடுவிப்பு மானியமாக (Front end subsidy) இருக்கும். | ➢ விண்ணப்பத்தாரர் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த மகளிராக இருக்க வேண்டும். **<u>மகளிர் இல்லாத குடும்பங்களில் ஆண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.</u>**<br>➢ 18 முதல் 65 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>➢ விண்ணப்பத்தாரர் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்க வேண்டும்.<br>➢ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>➢ விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின்கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது. | மாவட்ட மேலாளர், தாட்கோ. விண்ணப்பம் பதிவு செய்வதற்கான இணையதள முகவரி http://application.tahdco.com |
| 1. ஆ | **நில மேம்பாட்டுத் திட்டம்** | இத்திட்டம் ஆதிதிராவிட மக்களின் நிலங்களை விவசாயத்திற்கு ஏற்புடையதாக மாற்றுவதற்கு தேவையான நில | ➢ ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.<br>➢ 18 – 65 வயதிற்குள்ளாக | மாவட்ட மேலாளர், தாட்கோ. விண்ணப்பம் பதிவு செய்வதற்கான இணையதள |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேம்பாட்டு ஆதாரங்களை உறுதி செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.<br><br>➢ திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிக பட்சமாக 30% வீதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.<br>➢ இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் முன்விடுவிப்பு மானியமாக (Front end subsidy) இருக்கும். | இருக்க வேண்டும்.<br>➢ விண்ணப்பதாரர் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்க வேண்டும்.<br>➢ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>➢ நிலம் மேம்பாடு செய்வதற்கு நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.<br>➢ நிலத்தில் போதிய நீர் ஆதாரம் உள்ளதுஎன்பதற்கான புவியியல் வல்லுனரின் சான்று பெற்றிருக்க வேண்டும்.<br><br>➢ விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது. | முகவரி http://application.tahdco.com |
| இ. | **துரித மின் இணைப்புத் திட்டம்.** | ➢ தகுதியுடைய விண்ணப்பத்தாரர் ஒருவருக்கு 5 குதிரை சக்தி மின் இணைப்பிற்கு ரூ.2.50 இலட்சம், 7.5 குதிரை சக்தி மின் இணைப்பிற்கு ரூ.2.75 | ➢ விண்ணப்பதாரர் ஆதிதிராவிட விவசாயியாக இருக்க வேண்டும்.<br>➢ விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர், தாட்கோ | மாவட்ட மேலாளர், தாட்கோ. விண்ணப்பம் பதிவு செய்வதற்கான இணையதள முகவரி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இலட்சம், 10 குதிரை சக்தி மின் இணைப்பிற்கு ரூ.3.00 இலட்சம், 15 குதிரை சக்தி மின் இணைப்பிற்கு ரூ.4.00 இலட்சம், வைப்புத் தொகையில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மாணக் கழகத்திடம், தாட்கோ 90% மான்யத் தொகையை நேரடியாக செலுத்தி ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு துரித மின் இணைப்பு பெற்றுத் தந்திட முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. | திட்டங்களின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக்கூடாது. | http://application.tahdco.com |
| ஈ | **கிணறு அமைத்தல்** | ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த நில உரிமையாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற வகை செய்யப்பட்டுள்ளது. கிணறு அமைத்தலின் மூலம் நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தி நில பயன்பாடு மற்றும் நிலத்தின் வழி வருவாய் பெருக்குதலே இத்திட்டத்தின் நோக்கமாகும். | ➢ ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.<br>➢ 18–65 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>➢ விண்ணப்பதாரர் விவசாயத்தை தொழிலாக கொண்டவராக இருக்க வேண்டும்.<br>➢ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>➢ விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் | மாவட்ட மேலாளர், தாட்கோ. விண்ணப்பம் பதிவு செய்வதற்கான இணையதள முகவரி http://application.tahdco.com |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.<br>➢ விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் உள்ள நில உடைமை நஞ்சை 2.5 ஏக்கர் அல்லது புஞ்சை 5 ஏக்கருக்குள் இருக்க வேண்டும். | |
| 2. | **தொழில் முனைவோர் திட்டங்கள்** | ஆதிதிராவிடர்கள் தங்களுக்கு தெரிந்த தொழில் செய்திட, அவர்களை தொழில் முனைவோராக உயர்த்தும் நோக்கில், வருவாய் ஈட்டும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. | ➢ தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்<br>➢ மனுதாரர் ஆதிதிராவிடர் பிரிவினரைச் சேர்ந்தவராகவும் , 18–65 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>➢ கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலில் முன்அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.<br>➢ விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின்கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது. | மாவட்ட மேலாளர், தாட்கோவிண் ணப்பம் பதிவு செய்வதற்கான இணையதள முகவரி http://application.tahdco.com |
| 3.அ. | **இளைஞர் களுக்கான சுயவேலைவாய்ப்பு திட்டம் (SEPY)** | ➢ படித்த வேலையற்ற ஆதி திராவிடர் இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த விருப்பம் / அனுபவம் உள்ள தொழிலினை உருவாக்கிடும் வகையில் இத்திட்டம் | ➢ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>➢ மனுதாரர் ஆதி திராவிடர் பிரிவினரைச் சேர்ந்தவராகவும், 18 – 45 | மாவட்ட மேலாளர், தாட்கோ. விண்ணப்பம் பதிவு செய்வதற்கான இணையதள முகவரி http://application.t |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயல் படுத்தப் பட்டு வருகிறது | வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>➢ விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின்கீழ், இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.<br>➢ கடன் மற்றும் மானியம் கோரும் தொழில் குறித்து நன்கு அறிந்தவராகவும், அத்தொழிலில் அனுபவம் உள்ளவராகவும் இருக்கவேண்டும்.<br><br>➢ தாட்கோ மாநில அல்லது ஒன்றிய அரசு அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்களில் தகுதிச் சான்று பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | ahdco.com |
| ஆ. | **இளைஞர் களுக்கான சுய வேலை வாய்ப்பு திட்டம் (SEPY–C)** | சிறப்புத் திட்டமான (Sepy clinic) திட்டத்தின் மூலம் மருத்துவர் (MBBS, BDS, BSMS) பட்டம் பெற்று இந்தியன் மெடிக்கல் கவுன்சிலில் பதிவு செய்தவர்கள் சொந்தமாக மருத்துவமனை அமைப்பதற்கும், முடநீக்கு மையம் (Physiotheraphy centre) மருந்தகம் அமைப்பதற்கு உரிய படிப்பு படித்து உரிய கவுன்சிலில் பதிவு செய்திருக்க வேண்டும். கண்கண்ணாடியகம் , இரத்த பரிசோதனை நிலையம் அமைப்பதற்கு உரிய பட்ட / பட்டயப்படிப்பை முடித்திருக்க வேண்டும்<br>➢ திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிக பட்சமாக 30% வீதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.<br><br>➢ இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் முன்விடுவிப்பு மானியமாக (Front end subsidy) இருக்கும். | | |
| 4. | **சுய உதவிக் குழுக் களுக்கான** | ஆதி திராவிடர் சுய உதவிக் குழுக்கள் முறையாக தர நிர்ணயம் | ➢ ஆதி திராவிடர் மகளிர் மட்டுமே உள்ள குழுவாக இருக்க | மாவட்ட மேலாளர், தாட்கோ. |

| | | | | |
|---|---|---|---|---|
| | **பொருளாதார கடனுதவி (SHG-EA)** | செய்யப்பட்ட பின்பு கடன் பெற தகுதி பெறுகின்றார்கள். சுய உதவிக் குழுக்களுக்கு உரிய நேரத்தில் நியாயமான வட்டி விகிதத்தில் தேவைப்படும் கடன் வழங்குவதன் மூலம் ஆதி திராவிடர் மகளிர் பொருளாதார மேம்பாடு உறுதி செய்யப்படுகிறது.<br>➢ திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் அதிகபட்சமாக 50% அல்லது ரூ.2.50 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.<br>➢ இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் முன் விடுவிப்பு மானியமாக (Front end subsidy) இருக்கும். | வேண்டும்.<br>➢ உறுப்பினர்களுக்கான குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>➢ பொருளாதார கடன் பெறுவதற்கு இரண்டு முறை தரம் பிரித்தல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.<br>➢ சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் வேறு எந்த அரசு திட்டத்திலும் பொருளாதார கடனுக்கான மானியம் பெற்றிருக்க கூடாது. | விண்ணப்பம் பதிவு செய்வதற்கான இணையதள முகவரி http://application.tahdco.com |

## 1.2. பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

| பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|
| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **திட்டத்தின் விவரம்** | **தகுதி** | **தொடர்பு கொள்ள வேண்டிய நபர்** |
| 1 | **நிலமேம்பாட்டுத் திட்டம்** | இத்திட்டம் பழங்குடியின மக்களின் நிலங்களை விவசாயத்திற்கு தேவையான நில மேம்பாட்டு ஆதாரங்களை உறுதி செய்வதற்காக உருவாக்கப் பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக 50% அல்லது ரூ. 3.75 இலட்சம் தொகை மானியமாக வழங்கப்படும். இம் மானியம் முன் விடுவிப்பு மானியமாக (Front-Ended Subsidy) விடுவிக்கப்படும். இத்திட்டத்தின்மூலம் நிலவளத்தை மேம்படுத்துதல், ஆழ்குழாய் கிணறு/திறந்தவெளி கிணறு, பம்ப் செட் அமைத்தல், சொட்டு நீர் பாசனம் மற்றும் சுழல்முறை நீர்ப்பாசனம் அமைத்தல் போன்றவற்றிற்காக மானியம் வழங்கப்படுகிறது. | 1. விண்ணப்பதாரர் பழங்குடியின இனத்தைச் சார்ந்த வராக இருக்க வேண்டும்.<br>2. 18-65 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்<br>3. விண்ணப்பதாரர் விவசாயத்தை தொழிலாக கொண்டவராக இருக்க வேண்டும்.<br>4. விண்ணப்பதாரர் பெயரில் நஞ்சை 2.5 ஏக்கர் அல்லது புஞ்சை 5 ஏக்கருக்குள் இருக்க வேண்டும்.<br>5. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>6. விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் | மாவட்ட மேலாளர் தாட்கோ விண்ணப்பம் பதிவு செய்வதற்கான இணையதள முகவரி http://fast.tahdco.com |

| பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|
| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **திட்டத்தின் விவரம்** | **தகுதி** | **தொடர்பு கொள்ள வேண்டிய நபர்** |
| | | | பெற்றிருக்கக் கூடாது. | |
| 2 | **தொழில் முனைவோர் திட்டம்** | பழங்குடியின மக்கள் தங்களுக்கு தெரிந்த தொழில் செய்திட அவர்களை தொழில் முனைவோராக உயர்த்தும் நோக்கில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது<br>அதிகபட்சமாக 50% அல்லது ரூ.3.75 இலட்சம் மானியமாக வழங்கப்படும். இம் மானியம் முன் விடுவிப்பு மானியமாக (Front–Ended subsidy) விடுவிக்கப்படும். | 1. விண்ணப்பதாரர் பழங்குடியின இனத்தைச் சார்ந்த வராக இருக்க வேண்டும்.<br>2. 18–65 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்<br>3.<br>4. கடன் மற்றும் மான்யம் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்<br>5. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>6. விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது. | மாவட்ட மேலாளர் தாட்கோ<br>விண்ணப்பம் பதிவு செய்வதற்கான இணையதள முகவரி http://fast.tahdco.com |

| பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|
| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **திட்டத்தின் விவரம்** | **தகுதி** | **தொடர்பு கொள்ள வேண்டிய நபர்** |
| 3 | **இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு திட்டம்**<br><br>அ) பயணியர் வாகனம்/ ஈப்பு<br><br>ஆ) கனரக வாகனம்<br><br>இ) இதர தொழில் | பழங்குடியின இளைஞர்களுக்கு இலகு ரக வாகனம், கனரக வாகனம் வாங்க மற்றும் இதர தொழில்களுக்கு 50% மானியத்துடன் நிதியுதவி வழங்கப்படுகிறது. இம் மானியம் முன் விடுவிப்பு மானியமாக (Front-Ended subsidy) விடுவிக்கப்படும்.<br><br>இலகுரக வாகனம் 50% அல்லது அதிக பட்சமாக ரூ.4.00 இலட்சமும்<br><br>கனரக வாகனம் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.5.50 இலட்சமும்<br><br>இதர தொழில்களுக்கு 50% அல்லது ரூ.3.75 இலட்சம் அதிக பட்சமாக மானியம் வழங்கப்படுகிறது. | 1.விண்ணப்பதாரர் பழங்குடியின இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.<br>2.18-45 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்<br>3.குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br><br>4.விண்ணப்பதாரர் ஓட்டுநர் உரிமம் மற்றும் பேட்ஜ் பெற்றிருக்க வேண்டும்.<br>5.விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது. | மாவட்ட மேலாளர் தாட்கோ விண்ணப்பம் பதிவு செய்வதற்கான இணையதள முகவரி http://fast.tahdco.com |
| 4 | **மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார நிதி** | பழங்குடியின மகளிர் தங்களுக்குள் உள்ள தனித்திறமைகளை வெளிக்கொணர்ந்து ஒரு குழுவாக இணைந்து தெரிந்த தொழில் தொடங்கி | 1. பழங்குடியின மகளிர் மட்டுமே உறுப்பினர்களாக கொண்ட குழுவாக இருக்க வேண்டும். | மாவட்ட மேலாளர் தாட்கோ விண்ணப்பம் பதிவு செய்வதற்கான இணையதள முகவரி |

| பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | தொடர்பு கொள்ள வேண்டிய நபர் |
| | | வருமானம் ஈட்டி, சமூக மற்றும் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும் இக்குழு 12 முதல் 20 உறுப்பினர்களைக் கொண்டது. பொருளாதார நிதிக்கு 50% அல்லது ரூ.3.75 இலட்சம் இவற்றில் குறைந்த தொகை எதுவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இம் மானியம் முன் விடுவிப்பு மானியமாக (Front-Ended subsidy) விடுவிக்கப்படும். | 2. குழு உறுப்பினர்கள் 18-65 வயது உடையவராக இருக்க வேண்டும்<br>3.பொருளாதார கடனுக்கு குழு ஆரம்பித்து ஒரு வருடம் முடித்து தரம் செய்திருக்க வேண்டும்.<br>4. குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஊக்குநர்களுக்கும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்<br>5.விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது | http://fast.tahdco.com |
| 5 | **துரித மின் இணைப்பு திட்டம்** | விண்ணப்பதாரர் பழங்குடியின விவசாயியாக இருக்க வேண்டும்.<br>வயது வரம்பு ஏதுமில்லை.<br>குடும்ப ஆண்டு | நிலம் விண்ணப்பதாரருக்குச் சொந்தமாக இருப்பதுடன் அவரது பெயரில் நிலப்பட்டா இருக்க வேண்டும். மேற்கண்ட நிலத்தில் | மாவட்ட மேலாளர் தாட்கோ விண்ணப்பம் பதிவு செய்வதற்கான இணையதள முகவரி |

| பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|
| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **திட்டத்தின் விவரம்** | **தகுதி** | **தொடர்பு கொள்ள வேண்டிய நபர்** |
| | | வருமான உச்சவரம்பு ஏதும் இல்லை.<br><br>5 குதிரை சக்தி மின் இணைப்பிற்கு ரூ.2.50 இலட்சம், 7.5 குதிரை சக்தி மின் இணைப்பிற்கு ரூ.2.75 இலட்சம், 10 குதிரை சக்தி மின் இணைப்பிற்கு ரூ.3.00 இலட்சம், 15 குதிரை சக்தி மின் இணைப்பிற்கு ரூ.4.00 இலட்சம், வைப்புத் தொகையில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மாணக் கழகத்திடம், தாட்கோ 90% மான்யத் தொகையை நேரடியாக செலுத்தி பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின் இணைப்பு பெற்றுத் தந்திட முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. | கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டி ருக்க வேண்டும்.<br><br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மாண கழகத்தில் மின் இணைப்பு கோரி விண்ணப்பித்திருக்க வேண்டும். | http://fast.tahdco.com |

2. **திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் (Skill Development Training)**

ஆதிதிராவிடர் துணைத்திட்டத்திற்கான ஒன்றிய அரசின் சிறப்பு நிதி உதவியின் (SCA to SCSP) கீழ் ஆதி திராவிட மாணவ மாணவியர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி 2013–14ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தாட்கோ மூலம் பல்வேறு வகையான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | தகுதி | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|
| 1. | **திறன் மேம்பாட்டு பயிற்சிகள்**<br>➢ ஆயத்த ஆடை வடிவமைத்தல், வீட்டு அலங்கார பொருட்கள் வடிவமைத்தல் தொடர்பான பயிற்சிகள்.<br>➢ தானியங்கி துறை மற்றும் தொடர்பான பயிற்சிகள்<br>➢ வங்கி, நிதி மற்றும் காப்பீட்டுத்துறை தொடர்பான பயிற்சிகள்.<br>➢ அழகு மற்றும் ஆரோக்கியம் தொடர்பான பயிற்சிகள்.<br>➢ மென்பொருள் மற்றும் வன்பொருள் தொடர்பான பயிற்சிகள்.<br>➢ சுகாதாரம் தொடர்பான பயிற்சிகள்.<br>➢ தோல் தொடர்பான பயிற்சிகள்.<br>➢ தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பான பயிற்சிகள்.<br>➢ சரக்கு வாகன போக்குவரத்து தொடர்பான பயிற்சிகள்.<br>➢ ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான பயிற்சிகள்.<br>➢ குழாய் செப்பனிடுதல் மற்றும் தொடர்பான பயிற்சிகள்.<br>➢ மின்சாரம் மற்றும் தொடர்பான பயிற்சிகள்.<br>➢ சில்லரை வணிகம் மற்றும் தொடர்பான பயிற்சிகள் | ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். | மாவட்ட மேலாளர் தாட்கோ |
| 2 | ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை, வனத்துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை மூலம் பயிற்சிகள் வழங்குதல். தோட்டக்கலை தொடர்பான பயிற்சி<br>வேளாண் காடுகள், நர்சரி செடிகள் உருவாக்கி விற்பனை செய்தல், மண்புழு உரம் தயாரித்தல், விவசாய மேலாண்மை பயிற்சி<br>அறுவடை தொழில்நுட்ப இயந்திரங்கள், ஆழ்துளை கிணறு அமைக்கும் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்தல் குறித்த பயிற்சிகள் | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த விவசாயிகளாக இருத்தல் வேண்டும். | மாவட்ட மேலாளர் தாட்கோ |

| | | | |
|---|---|---|---|
| 3 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோரின் தொழில் முனைவை ஊக்கப்படுத்த தொழில் மேலாண்மை பயிற்சி திட்டம். | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முஂப்பை ஏற்படுத்தி மான்யத்துடன் வழங்கப்பட உள்ள கடன் தொகையை பயன்படுத்தி சிறப்பாக தொழில் செய்து வெற்றியடைய இத்திட்டம் வழிவகை செய்கிறது. கடன் வேண்டி விண்ணப்பித்து வங்கி ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும். | மாவட்ட மேலாளர் தாட்கோ |

**3. தூய்மைப் பணியாளர் நல வாரியம்**

அரசாணை (நிலை) எண்.71, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 11.06.2007–இன்படி தூய்மைப் பணியாளர் நல வாரியம் 2007 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்குமான நிதியுதவி வழங்க ரூ.1 கோடி வீதம் 2008–09, 2009–10 மற்றும் 2010–11 ஆகிய மூன்றாண்டுகளுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.3 கோடி வாரியத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

தாட்கோ மேலாண்மை இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்–செயலராக உள்ளார். வாரிய உறுப்பினர் அட்டை உள்ளவர்கள் மூக்குக் கண்ணாடி நிதியுதவி, மகப்பேறு நிதியுதவி, பிள்ளைகளுக்கான திருமண நிதியுதவி, கல்வி உதவித்தொகை, விபத்துகளுக்கான நிதியுதவி / ஈமச்சடங்கிற்கான நிதியுதவி, முதியோர் ஓய்வூதியம் போன்ற உதவிகளைப் பெற தகுதியுடையவராவர்.

அரசாணை நிலை எண்.108, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–6) துறை, நாள் 23.12.2021–ல் இவ்வலுவலகத்தில் வழங்கப்பட்ட பல்வேறு நலத்திட்டங்களுக்கான உதவித் தொகை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்ட உதவிகள் | | உதவித்தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | **விபத்துக் காப்பீட்டுத் திட்டம்** | | |
| | (அ) பணியிடத்தில் விபத்து இறப்பு | | 5,00,000/– |
| | (ஆ) விபத்து மரணம் | | 1,00,000/– |
| | (இ) விபத்து ஊனம் | | 1,00,000/– |
| 2 | இயற்கையாக மரணமடைந்தவரின் குடும்பத்தினருக்கு உதவி | | 20,000/– |
| 3 | ஈமச்சடங்கு உதவி | | 5,000/– |
| 4 | **கல்வி உதவித்தொகை** | | |
| | அ | 10ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஆ | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,000/– |
| | இ | 11ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஈ | 12ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,500/– |
| | உ | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,500/– |
| | ஊ | முறையான பட்டபடிப்பு | 2,000/– ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 3,000/– ஆண்டுக்கு |
| | எ | முறையான பட்டமேற்படிப்பு | 4,000/– ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 5,000/– ஆண்டுக்கு |
| | ஏ | தொழில் நுட்பப்பட்டப்படிப்பு | 4,000/– ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 6,000/– ஆண்டுக்கு |
| | ஐ | தொழில் நுட்பப்பட்ட மேற்படிப்பு | 6,000/– ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 8,000/– ஆண்டுக்கு |
| | ஒ | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,000/– ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 1,200/– ஆண்டுக்கு |
| 5 | திருமண உதவி<br>உறுப்பினர் அல்லது மகன் அல்லது மகள் (குடும்பத்திற்கு இருமுறை மட்டும்) | | ஆண்– ரூ.3,000/–<br>பெண்– ரூ.5,000/– |

| | | | |
|---|---|---|---|
| 6 | மகப்பேறு உதவி | | |
| | அ | மகப்பேறு உதவி மாதம் ரூ.1,000/– வீதம் | 6,000/– |
| | ஆ | கருச்சிதைவு / கருக்கலைப்பு | 3,000/– |
| 7 | பழைய கண்கண்ணாடியை மாற்றுவதற்கும் / புதிய கண்கண்ணாடி வாங்கிடவும் உதவி<br>(உறுப்பினருக்கு மட்டும்) | | 500/–க்கு மிகாமல் |
| 8 | முதியோர் ஓய்வூதியம் | | 1000/– பிரதி மாதம் |

**வாரியங்களின் கீழ் அளிக்கப்படும் உதவிகளின் விபரம்**

**தூய்மைப் பணியாளர் நல வாரியம் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள்**

| **வ. எண்** | **திட்டத்தின் பெயர் மற்றும் விவரம்** | **உதவி பெறுவதற்குரிய தகுதிகள்** | **மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள்** |
|---|---|---|---|
| 1. | **விபத்து ஈட்டுறுதித் திட்டம்** | அ) பணியிடத்தில் ஏற்பட்ட விபத்து மரணம் ரூ.5,00,000/–<br>ஆ) விபத்து மரணம் – ரூ.1,00,000/–<br>இ) விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப உதவித் தொகை வழங்கப்படும். | நலவாரிய உறுப்பினர் அடையாளஅட்டை |
| 2. | **இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை ரூ.20,000** | பதிவு பெற்ற உறுப்பினர் இயற்கை மரணம் எய்தினால் உறுப்பினர் இறப்புப் பதிவுச் சான்றிதழ் வாரிய உறுப்பினர் அசல் அடையாள அட்டையுடன் விண்ணப்பிக்க வேண்டும். | நலவாரிய உறுப்பினர் அடையாளஅட்டை |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் |
|---|---|---|---|
| 3. | **ஈமச் சடங்கு செலவிற்கான உதவித்தொகை ரூ.5,000/-** | பதிவு பெற்ற உறுப்பினர் இயற்கை மரணம் எய்தினால் உறுப்பினர் இறப்புப் பதிவுச் சான்றிதழ் வாரிய உறுப்பினர் அசல் அடையாள அட்டையுடன் விண்ணப்பிக்க வேண்டும். | நலவாரிய உறுப்பினர் அடையாளஅட்டை<br>இறப்பு பதிவு சான்று |
| 4. | **கல்வி உதவித் தொகை** | i) பதிவு செய்யப்பட்ட உறுப்பினரின் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.<br>ii) கணவன் மற்றும் மனைவி கல்வி உதவித் தொகை கோரி விண்ணப்பித்திருந்தால் இருவரில் ஒருவருக்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்படும்<br>iii) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறையில் வழங்கப்படும் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் உறுப்பினரின் மகன்/மகள் உதவித் தொகை பெறத் தகுதியுடையவராக இருப்பின், ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் மட்டுமே உதவித் தொகை பெறத் தகுதியுடையவர் ஆவார். | நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் |
|---|---|---|---|
| 5. | **திருமண உதவித் தொகை**<br>ஆண்– ரூ.3,000/–<br>பெண்– ரூ.5,000/– | திருமணச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட வயதை பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும். உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவு பெற்ற உறுப்பினரின் குடும்பத்திற்கு இருமுறை மட்டுமே வழங்கப்படும். உதவித் தொகை கோரி கணவர் அல்லது மனைவி ஆகிய இருவரும் விண்ணப்பித்திருந்தால் இருவரில் ஒருவருக்கு மட்டுமே வழங்கப்படும். | நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை, வயதுச் சான்றிதழ் |
| 6. | **மகப்பேறு / கருச்சிதைவு உதவித் தொகை** | மருத்துவச் சான்று பெறப்பட வேண்டும். பதிவு பெற்ற பெண் உறுப்பினர் இருமுறை மட்டுமே உதவித்தொகை பெறலாம். அவர்களுக்கு ஏற்கெனவே இரண்டு குழந்தைகள் இருப்பின் இந்த உதவித்தொகை பெற தகுதியற்றவர் ஆவர். | நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை,<br>மருத்துவச் சான்று |
| 7. | **மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடு செய்தல் ரூ.500/– வரை** | பதிவு பெற்ற உறுப்பினருக்கு ஒரு முறை மட்டுமே உதவித்தொகை வழங்கப்படும். | நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் |
|---|---|---|---|
| 8. | **முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் ரூ.1,000/–** | 60 வயது பூர்த்தி அடைந்த உறுப்பினர்கள் மட்டும் தகுதி உடையவர் ஆவார். 60 வயது ஆகாத வேலை செய்ய இயலாதவர் களுக்கும், வேலை செய்ய உடல் தகுதி இல்லாதவர்களுக்கும் சிவில் சர்ஜன் நிலைக்குக் குறையாத மருத்துவ அலுவலரின் சான்றுடன் ஓய்வூதியம் கோரி விண்ணப்பிக்க வேண்டும். | நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை, மருத்துவச் சான்று |

**வயது வரம்பு:–** 18 வயது முடிவடைந்த ஆனால் 60 வயது முடிவடையாதவர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ளலாம்

**அணுக வேண்டிய அலுவலர் :–**

**தூய்மை பணிபுயாளர் நல வாரியம் –** மாவட்ட மேலாளர், தாட்கோ

# தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம்

தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என்று 19.08.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது தலைமையில் நடைபெற்ற மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 08.09.2021 அன்று சட்டமன்ற பேரவையில் விதி எண்.110ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கான அறிவிப்பினை வெளியிடப்பட்டதை தொடர்ந்து உரிய சட்ட முன்மொழிவு தாக்கல் செய்யப்பட்டு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணைய சட்டம் 17/2021 அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்ட நாள் 13.10.2021 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதுவரை 703 மனுக்கள் பெறப்பட்டு விசாரணைக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு விசாரணை மேற்கொள்ளும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் விளக்கம் பெற்று மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது.

**மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரியை அணுகவும்.**

| வ. எண். | பதவி | முகவரி |
|---|---|---|
| 1 | ஆணையர்<br>ஆதி திராவிடர் நலத்துறை | எழிலகம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை–600 005.<br>தொலைபேசி–<br>044–28594780,<br>நிகரி: 044–28419612. |
| 2 | இயக்குநர்,<br>பழங்குடியினர் நலத்துறை | எழிலகம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை–600 005.<br>தொலைபேசி–<br>044–28516689,<br>நிகரி: 044–28419612. |
| 3 | மேலாண்மை இயக்குநர்,<br>தாட்கோ | எண். 31, செனடாப் சாலை,<br>2வது சந்து , தேனாம்பேட்டை<br>சென்னை – 600 018<br>044–24310197<br>நிகரி: 044–24310196. |

**பிற்சேர்க்கை–1**
**பட்டியல்**
**(விதி 12(4)ஐக் காண்க)**
**தீருதவிக் தொகைக்கான வரைமுறைகள்**

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| 1. | உண்ணத்தகாத அல்லது அருவருப்பான பொருளை உண்ணச் செய்தல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(a) | வன்கொடுமைக்கு இலக்கானோருக்கு ஒரு இலட்ச ரூபாய் பின்வருமாறு வழங்கப்பட வேண்டும் :–<br>வரிசை எண்கள் (2) மற்றும் (3)ற்கு முதல் தகவல் அறிக்கை நிலையில் 10 விழுக்காடு மற்றும் தொடர் எண்கள் (1), (4) மற்றும் (5)ற்கான முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு.<br>வரிசை எண்கள்(2) மற்றும் (3)ற்கு கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 40 விழுக்காடு இதேபோல் வரிசை எண்கள் (1), (4) மற்றும் (5)ற்கு 25 விழுக்காடு | ரூ.20,000/– |
| 2. | மலசலக்கழிவுகள், கழிவுநீர், மிருகக் கழிவுகள், கழிவு நீர், மிருகக் கழிவுகள், அல்லது யாதொரு அருவருக்கத்தக்க பொருளை திணித்தல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(b) | | |
| 3. | மலசலக்கழிவுகள், கழிவுப்பொருள்கள், மிருகக்கழிவுகளை திணித்தல் காயப்படுத்துதல், அவமதித்தல் அல்லது தொந்தரவு செய்யும் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(c) | | |
| 4. | செருப்பு மாலை அணிவித்தல் அல்லது நிர்வாணமாக அல்லது அரை நிர்வாணமாக நடத்திச் செல்லுதல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(d) | | |
| 5. | வலுகட்டாயமாக உடைகளை களைதல், வலுக்கட்டாயமாக தலைமுடியை வழித்தல், மீசையை எடுத்தல், முகம் அல்லது உடலில் வரைதல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(e) | | |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| 6. | முறையற்ற வகையில் நிலத்தை ஆக்கிரமித்தல் அல்லது பயிரிடுதல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(f) | வன்கொடுமைக்கு இலக்கானோருக்கு ஒரு இலட்சம் சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது ஒன்றிய அரசின் நேரடி ஆட்சி பகுதி நிருவாகத்தால் அரசு செலவில் நிலம் அல்லது இருப்பிடம் அல்லது தண்ணீர் வழங்குதல் அல்லது பாசன வசதி செய்து தரப்படுதல் வேண்டும். வன்கொடுமைக்கு இலக்கானோருக்கு இத்தொகை பின்வருமாறு வழங்கப்பட வேண்டும். முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.20,000/- |
| 7. | நிலம் அல்லது இருப்பிடத்தினை முறையற்ற வகையில் கையகப்படுத்துதல் அல்லது வன உரிமைகள் உள்ளிட்ட உரிமையில் தலையிடுதல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(g) | | |
| 8. | பேகர் முறை அல்லது பிற வகைகளில் வல்லந்தனமான வேலை அல்லது கொத்தடிமை இச்சட்டத்தின் பிரிவு 3(1)(h) | | |
| 9. | மனித அல்லது மிருகக் கழிவுகளை சுமக்கச் செய்தல் அல்லது அகற்றச் செய்தல் அல்லது பிணக்குழி தோண்ட கட்டாயப்படுத்தல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(i) | | |
| 10. | பட்டியலிடப்பட்ட இனத்தவர் அல்லது பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவரை கழிவுகளை அகற்ற அல்லது அத்தகைய பணிகளில் பணியமர்த்துதல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(j) | | |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| 11. | பட்டியலிடப்பட்ட இனத்தவர் அல்லது பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த பெண்ணை தேவதாசியாக பணிபுரிய செய்தல் அல்லது ஊக்குவித்தல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(k) | வன்கொடுமைக்கு இலக்கானோருக்கு ஒரு இலட்சம் சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது ஒன்றிய அரசின் நேரடி ஆட்சி பகுதி நிருவாகத்தால் அரசு செலவில் நிலம் அல்லது இருப்பிடம் அல்லது தண்ணீர் வழங்குதல் அல்லது பாசன வசதி செய்து தரப்படுதல் வேண்டும். வன்கொடுமைக்கு இலக்கானோருக்கு இத்தொகை பின்வருமாறு வழங்கப்பட வேண்டும்.<br>முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ. 20,000/– |
| 12. | வாக்களித்தலை, மனுதாக்கல் செய்வதைத் தடுத்தல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(l) | வன்கொடுமைக்கு இலக்கானோருக்கு ரூபாய் எண்பத்தைந்தாயிரம்.<br>இத்தொகை பின்வருமாறு வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ. 15,000/– |
| 13. | ஊராட்சி அல்லது நகராட்சி அலுவலரை கடமையை செய்ய விடாது வற்புறுத்துதல் அல்லது தடை ஏற்படுத்துதல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(m) | | |
| 14. | வாக்குப்பதிவு வன்முறைக்கு பின்னர் சமூக மற்றும் பொருளாதார புறக்கணிப்பு விதித்தல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(n) | | ரூ. 15,000/– |
| 15. | குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்களித்ததற்கு அல்லது வாக்களிக்காததற்கு இச்சட்டத்தின் கீழான யாதொரு குற்றச் செயல் புரிதல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(o) | | |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| 16. | பொய்யான தீயநோக்குடைய அல்லது அலைக்கழிப்பிற்கு உள்ளாக்குவதான சட்டமுறை நடவடிக்கைகளை ஏற்படுத்துதல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(p) | | |
| 17. | பொது ஊழியரிடம் பொய் அல்லது அற்பச் செய்தியை அளித்தல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(q) | வன்கொடுமைக்கு இலக்கானவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் அல்லது உள்ளபடியான சட்ட செலவிற்கான முழுத் தொகையும், இழப்பீடும், இவற்றுள் எது குறைவோ அது பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ)நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.20,000/– |
| 18. | பொதுமக்கள் பார்வையில் படக்கூடிய யாதொரு இடத்தில் வேண்டுமென்றே அவமானப்படுத்துதல் அல்லது இழிவுப் படுத்தி அச்சுறுத்துதல். இச்சட்டத்தின் பிரிவு 3(1)(r) | வன்கொடுமைக்கு இலக்கானவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப் பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.20,000/– |
| 19. | பொதுமக்கள் பார்வையில் படக்கூடிய யாதொரு இடத்தில் சாதியின் பெயரால் வசை பாடுதல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(s) | | |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| 20. | புனிதமான அல்லது உயர்நிலையிலிருக்கும் யாதொரு பொருளையும் அழித்தல், சேதப்படுத்துதல் அல்லது மாசுபடுத்துதல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(t) | | ரூ.20,000/– |
| 21. | பகைமை, வெறுப்பு மற்றும் தீய எண்ண உணர்வுகளை வளர்த்தல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(u) | | |
| 22. | மரணமடைந்த உயர்நிலையிலிருந்த யாதொரு நபரையும் சொற்களின் வாயிலாக அல்லது அவமரியாதை செய்தல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(v) | | |
| 23. | பாலியல் வன்முறை செயலாக, செயல்கள் அல்லது சைகைகளை பயன்படுத்தி, பட்டியல் வகுப்பின அல்லது பழங்குடி வகுப்பின பெண் ஒருவரை அவருடைய இசைவில்லாமல் உள்நோக்கத்துடன் தொடுதல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(w) | வன்கொடுமைக்கு இலக்கானவருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.50,000/– |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| 24. | இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 326A ஆம் பிரிவு (45 / 1860) அமிலம் உள்ளிட்டவற்றை வீசி கடுமையான காயம் உண்டாக்குதல்.<br><br>இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 326B ஆம் பிரிவு (45/ 1860) வேண்டுமென்றே அமிலத்தை வீசுதல் அல்லது வீசுவதற்கு முயற்சி செய்தல் இச்சட்டத்தின் பிரிவு 3(2)(va) மற்றும் விவர அட்டவணை) | அ) முகத்தில் 2 சதவீதத்திற்கும் அதிகமான தீக்காயம் அல்லது கண், காது, மூக்கு மற்றும் வாய் செயல்பாடு சேதமுற்ற நேர்வில் மற்றும் அல்லது உடலில் 30 சதவீதத்திற்கும் மேலான தீக்காயம் ஏற்பட்டவருக்கு எட்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய்;<br>ஆ) உடலில் 10 சதவீதத்திற்கும் 30 சதவீதத்திற்கிடையே தீக்காயம் ஏற்பட்டவருக்கு நான்கு இலட்சத்து பதினைந்தாயிரம்;<br>இ) முகத்தில் இல்லாமல், உடலில் 10 சதவீதத்திற்கும் குறைவான தீக்காயம் ஏற்பட்டவருக்கு எண்பத்தைந்தாயிரம் ரூபாய்;<br>மேலும், மாநில அரசு அல்லது ஒன்றிய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி நிருவாகமானது, அமில தாக்குதலால் பாதிக்கப் பட்டவரின் சிகிச்சைக்கு முழு பொறுப்பேற்கும்.<br>இனங்கள் (அ) முதல் (இ) வரையில், பின்வரும் வகையில் தொகை அளிக்கப்பட வேண்டும்.<br>முதல் தகவல் அறிக்கை நிலையில் 50 சதவீதம்<br>மருத்துவ அறிக்கை பெற்ற பின் 50 சதவீதம் | அ) ரூ.3,75,000/-<br><br>ஆ) ரூ.1,88,000/-<br><br>இ) ரூ.15,000/- |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| 25. | இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 354ஆம் பிரிவு (45/ 1860) பெண்ணின் கண்ணியத்தை சீர் குலைக்கும் நோக்கத்தில் பெண்களுக்கு எதிரானதாக்குதல் அல்லது குற்றச் செயலில் ஈடுபடுதல் இச்சட்டத்தின் பிரிவு 3(2)(va) மற்றும் விவர அட்டவணை) | வன்கொடுமைக்கு இலக்கானவருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ)நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ)கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.50,000/– |
| 26. | இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 354Aஆம் பிரிவு (45 / 1860) பாலியல் வன்கொடுமை மற்றும் பாலியல் வன்கொடுமைக்கான தண்டனை இச்சட்டத்தின் பிரிவு 3(2)(va) மற்றும் விவர அட்டவணை) | வன்கொடுமைக்கு இலக்கானவருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.50,000/– |
| 27. | இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 354B ஆம் பிரிவு (45 / 1860) ஆடை களையும் நோக்கத்துடன் பெண்ணை தாக்குதல் அல்லது குற்றச் செயலில் ஈடுபடுதல் இச்சட்டத்தின் பிரிவு 3(2)(va) மற்றும் விவர அட்டவணை) | வன்கொடுமைக்கு இலக்கானவருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.50,000/– |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| 28. | இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 354C ஆம் பிரிவு (45/ 1860) பிறர் பாலுறவில் ஈடுபடுவதை கண்டு களித்தல் அல்லது அதில் ஈடுபடுதல் இச்சட்டத்தின் பிரிவு 3(2)(va) மற்றும் விவர அட்டவணை) | வன்கொடுமைக்கு இலக்கானவருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 10 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ)கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 40 விழுக்காடு | ரூ.50,000/- |
| 29. | இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 354D ஆம் பிரிவு (45/ 1860) பின்தொடர்தல் இச்சட்டத்தின் பிரிவு 3(2)(va) மற்றும் விவர அட்டவணை) | | |
| 30. | இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 376B ஆம் பிரிவு (45/ 1860) பிரிந்திருக்கும்போது கணவன் தன் மனைவியுடன் பாலியல் உடலுறவு கொள்ளுதல் இச்சட்டத்தின் பிரிவு 3(2)(va) மற்றும் விவர அட்டவணை) | வன்கொடுமைக்கு இலக்கானவருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 50 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 25 விழுக்காடு<br>இ)கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.50,000/- |
| 31. | இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 376C ஆம் பிரிவு (45/ 1860) அதிகாரத்திலுள்ள நபரால் பாலியல் வன்முறை இச்சட்டத்தின் பிரிவு 3(2)(va) மற்றும் விவர அட்டவணை) | வன்கொடுமைக்கு இலக்கானவருக்கு நான்கு இலட்சம் ரூபாய் பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 50 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 25 விழுக்காடு<br>இ)கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.1,20,000/- |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| 32. | இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 509 ஆம் பிரிவு (45/1860) வார்த்தை, சைகை அல்லது செயல்பாடுகளால் பெண்ணை மானபங்கப்படுத்துவது இச்சட்டத்தின் பிரிவு 3(2)(va) மற்றும் விவர அட்டவணை) | வன்கொடுமைக்கு இலக்கானவருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.50,000/- |
| 33. | நீரை மாசுபடுத்துதல் அல்லது திருட்டுத்தனமாக பயன்படுத்துதல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(x) | நீர் மாசுபடுத்தப்படும்போது அதனைத் தூய்மையாக்குதல் உள்ளடங்கலாக இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஆகும் மொத்தச் செலவுத் தொகை தொடர்புடைய மாநில அரசு அல்லது ஒன்றிய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட அரசால் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் மாவட்ட நிர்வாகம் உள்ளாட்சி மன்றத்துடன் கலந்தாலோசித்து உருவாக்கப்பட வேண்டிய பொது சொத்துக்களை உருவாக்குவதற்காக ரூபாய் எட்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் அளவுக்கு மாவட்ட குற்றவியல் நீதிபதியிடம் வைப்பீடு செய்யப்பட வேண்டும். | ரூ.3,75,000/- |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| 34. | பொதுமக்கள் கூடும் இடங்களுக்குச் செல்லும் பாதையின் வழக்காற்று உரிமையை மறுத்தல் அல்லது பொதுமக்கள் கூடும் இடங்களை பயன்படுத்த விடாமல் அல்லது அணுகவிடாமல் அடைத்தல் இச்சட்டத்தின் பிரிவு 3(1)(y) | பாதிக்கப்பட்டவருக்கு ரூபாய் நான்கு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மற்றும் பாதையைப் பயன் படுத்துவதற்கான இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஆகும் செலவுத் தொகை சம்பந்தக்கட்ட மாநில அரசு அல்லது ஒன்றிய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட அரசால் மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தொகை பின்வருமாறு வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.1,50,000/- |
| 35. | வீடு, கிராமம், குடியிருப்பு பகுதியை விட்டு வெளியேறுவதற்கு வலியுறுத்தல் (சட்டத்தின் பிரிவு 3(1)(z) | வீட்டு மனையை அல்லது வீடு, கிராமம் அல்லது ஏனைய குடியிருப்பு பகுதியில் தங்கும் உரிமையை சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது ஒன்றிய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட அரசால் மீட்டுத் தரப்பட வேண்டும். மேலும் பாதிக்கப்பட்டவருக்கு ரூபாய் ஒரு லட்சமும் அந்த வீடு இடிக்கப்பட்டிருப்பின், அதனை அரசு செலவில் கட்டித் தர வேண்டும். இழப்பீட்டுத் தொகை பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.20,000/- |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| 36. | **பட்டியல் வகுப்பினர் அல்லது பழங்குடியினர் ஒருவரை பின்வருவன தொடர்பாக எதிர்ப்பது அல்லது தடுப்பது**<br>(A) ஒரு பகுதியிலுள்ள பொது சொத்து வளங்கள் அல்லது இடுகாடு அல்லது சுடுகாடு போன்றவற்றை மற்றவர்களுடன் சமமாக பயன் படுத்துதல் அல்லது ஆறு, ஓடை, நீரூற்று, கிணறு, குளம், நீர்த்தேக்கத் தொட்டி, தண்ணீர் குழாய் அல்லது யாதொரு நீர்நிலைகள் அல்லது குளிக்கும் துறை அல்லது யாதொரு பொது போக்குவரத்து அல்லது சாலை அல்லது வழித்தடங்கள் போன்றவை பயன் படுத்துதல்<br>(இச்சட்டத்தின் பிரிவு<br>3(1) (za ) (A) | ஒரு பகுதியிலுள்ள பொது சொத்து வளங்கள் அல்லது இடுகாடு அல்லது சுடுகாடு போன்றவற்றை மற்றவர்களுடன் சமமாக பயன் படுத்துதல் அல்லது ஆறு, ஓடை, நீரூற்று, கிணறு, குளம், நீர்த்தேக்கத் தொட்டி, தண்ணீர் குழாய் அல்லது யாதொரு நீர்நிலைகள் அல்லது குளிக்கும் துறை அல்லது யாதொரு பொது போக்குவரத்து அல்லது சாலை அல்லது வழித்தடங்கள் உள்ளிட்ட உரிமையை தொடர்புடைய மாநில அரசு / ஒன்றிய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட அரசு மீட்டெடுத்து அனைவருக்கும் பொதுவாக்க வேண்டும். இழப்பீட்டுத் தொகை ரூபாய் ஒரு இலட்சம் பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25% விழுக்காடு | ரூ.20,000/- |
| | (B) மலையேறுதல் அல்லது மிதிவண்டி அல்லது இருசக்கர வாகனங்களின் மீது அமர்தல் அல்லது சவாரி செய்தல் அல்லது பொது இடங்களில் காலணிகள் அல்லது புது ஆடைகள் அணிதல் அல்லது திருமண ஊர்வலத்தின் போது குதிரை அல்லது பிற வாகனங்களின் மீது அமர்தல் அல்லது சவாரி செய்தல்<br>(இச்சட்டத்தின் பிரிவு<br>3(1) (za ) (B) | மலையேறுதல் அல்லது மிதிவண்டி அல்லது இருசக்கர வாகனங்களின் மீது அமர்தல் அல்லது சவாரி செய்தல் அல்லது பொது இடங்களில் காலணிகள் அல்லது புது ஆடைகள் அணிதல் அல்லது திருமண ஊர்வலத்தின் போது குதிரை அல்லது பிற வாகனங்களின் மீது அமர்தல் அல்லது சவாரி செய்தல் உள்ளிட்ட உரிமையை தொடர்புடைய மாநில அரசு/ ஒன்றிய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட அரசு மீட்டெடுத்து அனைவருக்கும் பொதுவாக்க வேண்டும். இழப்பீட்டுத் | ரூ.20,000/- |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| | | தொகை ரூபாய் ஒரு இலட்சம் பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | |
| | (C) பொதுவான அல்லது ஒரு மதத்தை பின்பற்றும் நபர்கள் தொடர்புடைய வழிபாட்டுத் தலத்திற்குள் நுழைவது அல்லது சமூக அல்லது கலாச்சார யாத்திரைகளில் பங்கேற்பது அல்லது நடத்துவது<br>(இச்சட்டத்தின் பிரிவு<br>3(1) (za ) (C) | பொதுவான அல்லது ஒரு மதத்தை பின்பற்றும் நபர்கள் தொடர்புடைய வழிபாட்டுத் தலத்திற்குள் நுழைவது அல்லது சமூக அல்லது கலாச்சார யாத்திரைகளில் பங்கேற்பது அல்லது நடத்துவது உள்ளிட்ட உரிமையை தொடர்புடைய மாநில அரசு / ஒன்றிய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட அரசு மீட்டெடுத்து அனைவருக்கும் பொதுவாக்க வேண்டும். இழப்பீட்டுத் தொகை ரூபாய் ஒரு இலட்சம் பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ)கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.20,000/- |
| | (D) யாதொரு கல்வி நிறுவனம், மருத்துவ மனை, மருந்தகம், ஆரம்ப சுகாதார நிலையம், கடை அல்லது பொதுமக்களுக்கான பொழுது போக்கு இடங்கள் அல்லது பிற பொது இடங்களில் நுழைவது அல்லது பொது உபயோகத்திற்கான யாதொரு பாத்திரங்கள் அல்லது பொருட்களை பயன்படுத்துதல், பொது மக்களுக்காக திறக்கப்பட்ட | யாதொரு கல்வி நிறுவனம், மருத்துவ மனை, மருந்தகம், ஆரம்ப சுகாதார நிலையம், கடை அல்லது பொதுமக்களுக்கான பொழுது போக்கு இடங்கள் அல்லது பிற பொது இடங்களில் நுழைவது அல்லது பொது உபயோகத்திற்கான யாதொரு பாத்திரங்கள் அல்லது பொருட்களை பயன்படுத்துதல், பொது மக்களுக்காக திறக்கப்பட்ட யாதொரு இடத்தை பயன்படுத்துதல் உள்ளிட்ட உரிமையை | |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| | யாதொரு இடத்தை பயன்படுத்துதல் (இச்சட்டத்தின் பிரிவு 3(1) (za ) (D) | தொடர்புடைய மாநில அரசு / ஒன்றிய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட அரசு மீட்டெடுத்து அனைவருக்கும் பொதுவாக்க வேண்டும். இழப்பீட்டுத் தொகை ரூபாய் ஒரு இலட்சம் பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.20,000/– |
| | (E) யாதொரு தொழிலையும் அல்லது யாதொரு வேலையையும் மேற் கொள்ளுதல், சமூகத்தின் இதர நபர்கள் அல்லது பிரிவினரின் பயன்பாட்டு உரிமையுள்ள அல்லது வாய்ப்புள்ள வணிகம் அல்லது வியாபாரம் அல்லது வேலைவாய்ப்பு அல்லது இதர வேலைகளை மேற்கொள்ளுதல் (இச்சட்டத்தின் பிரிவு 3(1) (za ) (E) | யாதொரு தொழிலையும் அல்லது யாதொரு வேலையையும் மேற் கொள்ளுதல், சமூகத்தின் இதர நபர்கள் அல்லது பிரிவினரின் பயன்பாட்டு உரிமையுள்ள அல்லது வாய்ப்புள்ள வணிகம் அல்லது வியாபாரம் அல்லது வேலைவாய்ப்பு அல்லது இதர வேலைகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட உரிமையை தொடர்புடைய மாநில அரசு / ஒன்றிய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட அரசு மீட்டெடுத்து அனைவருக்கும் பொதுவாக்க வேண்டும். இழப்பீட்டுத் தொகை ரூபாய் ஒரு இலட்சம் பின்வரும் முறையில் வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.20,000/– |
| 37. | சூனியம் வைத்தல் அல்லது பில்லி சூனியம் வைத்து வருதல் என்ற குற்றச்சாட்டின் பேரில் உடலுக்குத் தீங்கு அல்லது மன உளைச்சல் ஏற்பட காரணமாக இருத்தல் (இச்சட்டத்தின் பிரிவு 3(1) (zb ) | பாதிக்கப்பட்டவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும், அவமரியாதை, அவமானம், ஊறு மற்றும் அவதூறு ஏற்பட்டதற்கேற்ப பின்வருமாறு தொகை வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு | ரூ.20,000/– |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| | | ஆ)நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | |
| 38. | சமூக அல்லது பொருளாதார வகையில் விலக்கி வைப்பதாக வலியுறுத்துதல் அல்லது அச்சுறுத்துதல் (இச்சட்டத்தின் பிரிவு 3(1) (zc) | சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது ஒன்றிய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட அரசு ஏனைய நபர்களுக்கிணையான அனைத்து பொருளாதார மற்றும் சமூக சேவைகளுக்கான வழிவகையை அனைவருக்கும் சமமாக்கும் வகையில் மீட்டெடுக்க வேண்டும். பாதிக்கப்பட்டவருக்கு ரூபாய் ஒரு இலட்சம் பின்வருமாறு வழங்கப்பட வேண்டும். குற்ற அறிக்கை கீழ்நிலை நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும்போது முழுத் தொகையும் வழங்கப்பட வேண்டும். | ரூ.20,000/- |
| 39. | பொய்ச்சான்று அளித்தல் அல்லது உருவாக்குதல் (இச்சட்டத்தின் பிரிவு 3(1) (i) மற்றும் (ii) | பாதிக்கப்பட்டவருக்கு நான்கு இலட்சத்து பதினைந்தாயிரம் ரூபாய் பின்வருமாறு வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.1,25,000/- |
| 40. | இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் கீழ் (45 / 1860) பத்தாண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட கால அளவு சிறைத் தண்டனை விதிக்கத்தக்க குற்றங்களில் ஈடுபடுதல் (இச்சட்டத்தின் பிரிவு 3(2)) | பாதிக்கப்பட்டவர் அல்லது அவரைச் சார்ந்திருப்பவருக்கு நான்கு இலட்சம் ரூபாய் வழங்கப்பட வேண்டும். இந்த அட்டவணையில் வேறு வகையில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருந்தால் இத்தொகை வேறுபடும். கீழ்க்கண்டவாறு தொகை வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.1,20,000/- |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| 41. | இச்சட்டத்தின் விவர அட்டவணையில், குறிப்பிடப்பட்டுள்ள இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் கீழ் (45/1860) இழைக்கப்படும் குற்றங்கள், அத்தகைய குற்றங்களுக்காக இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்டவாறு விதிக்கத்தக்க அத்தகைய தண்டனை (இச்சட்டத்தின் பிரிவு 3(2) (va) உடன் சட்ட்த்தின் அட்டவணையைப் படிக்க) | பாதிக்கப்பட்டவர் அல்லது அவரைச் சார்ந்திருப்பவருக்கு ரூபாய் இரண்டு இலட்சம் வழங்கப்பட வேண்டும். இந்த அட்டவணையில் வேறு வகையில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருந்தால் இத்தொகை வேறுபடும். கீழ்க்கண்டவாறு தொகை வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.50,000/− |
| 42. | பொது ஊழியரால் வன்கொடுமைக்கு இலக்காக்கப் படுதல் (இச்சட்டத்தின் பிரிவு 3(2) (vii)) | பாதிக்கப்பட்டவர் அல்லது அவரைச் சார்ந்திருப்பவருக்கு ரூபாய் இரண்டு இலட்சம் பின்வருமாறு வழங்கப்பட வேண்டும்.<br>அ) முதல் தகவல் அறிக்கை நிலையில் 25 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிக்கை அனுப்பும் போது 50 விழுக்காடு<br>இ) கீழ்நிலை நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும் போது 25 விழுக்காடு | ரூ.50,000/− |
| 43. | **ஏலாமை:** சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அறிவிக்கை எண்.16−18/97, நாள் 1.6.2001−இல் கண்டுள்ளவாறு சான்றளிப்பதற்கான நடைமுறைகளின் பல்வேறு ஏலாமை பற்றிய மதிப்பீட்டிற்கான வழிகாட்டி நெறிமுறைகள், அறிவிக்கையின் நகல் இணைப்பு II−இல் உள்ளது<br>அ) 100 சதவீதம் ஏலாமைக்கு உள்ளாதல் | பாதிக்கப்பட்டவருக்கு ரூபாய் எட்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் பின்வருமாறு வழங்கப்பட வேண்டும்.<br>அ) மருத்துவப் பரிசோதனை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட மருத்துவ அறிக்கைக்குப் பின்னர் 50 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்ற அறிக்கை அனுப்பப்படும்போது 50 விழுக்காடு | ரூ.3,75,000/− |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| | ஆ) ஏலாமை 100 சதவீதத்திற்குக் குறைவாக ஆனால் 50 சதவீதத்திற்கு அதிகமாக இருக்கும் பொழுது | பாதிக்கப்பட்டவருக்கு ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் பின்வருமாறு வழங்கப்பட வேண்டும்.<br>அ) மருத்துவப் பரிசோதனை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட மருத்துவ அறிக்கைக்குப் பின்னர் 50 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்ற அறிக்கை அனுப்பப்படும்போது 50 விழுக்காடு | ரூ.1,50,000/– |
| | இ)ஏலாமை 50 சதவீதத்திற்குக் குறைவாக இருக்கும் பொழுது | பாதிக்கப்பட்டவருக்கு ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் பின்வருமாறு வழங்கப்பட வேண்டும்.<br>அ) மருத்துவப் பரிசோதனை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட மருத்துவ அறிக்கைக்குப் பின்னர் 50 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்ற அறிக்கை அனுப்பப்படும்போது 50 விழுக்காடு | ரூ.65,000/– |
| 44. | வன்புணர்ச்சி, இயற்கைக்கு முரணான குற்றங்கள் அல்லது கூட்டு வன்புணர்ச்சி<br>(i ) வன்புணர்ச்சி உள்ளிட்டவை அல்லது இயற்கைக்கு முரணான குற்றங்கள் (இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவுகள் 375, 376, 376A, 376E மற்றும் இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 377 (45 of 1860)] | பாதிக்கப்பட்டவருக்கு ரூபாய் ஐந்து இலட்சம் பின்வருமாறு வழங்கப்பட வேண்டும்.<br>அ)மருத்துவப் பரிசோதனை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட மருத்துவ அறிக்கைக்குப் பின்னர் 50 விழுக்காடு<br>ஆ)நீதிமன்றத்திற்கு குற்ற அறிக்கை அனுப்பப்படும்போது 25 விழுக்காடு<br>இ) நீதிமன்றத்தில் தண்டனை விதிக்கப்படுகையில் 25 விழுக்காடு | ரூ.2,00,000/– |
| | (ii) கூட்டு வன்புணர்ச்சி<br>(இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 376 D (45/1860) | பாதிக்கப்பட்டவருக்கு ரூபாய் எட்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் பின்வருமாறு வழங்கப்பட வேண்டும்.<br>அ)மருத்துவப் பரிசோதனை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட மருத்துவ அறிக்கைக்குப் பின்னர் 50 விழுக்காடு<br>ஆ)நீதிமன்றத்திற்கு குற்ற அறிக்கை அனுப்பப்படும்போது 25 விழுக்காடு<br>இ) நீதிமன்றத்தில் தண்டனை விதிக்கப்படுகையில் 25 விழுக்காடு | ரூ.3,75,000/– |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| 45. | கொலை / இறப்பு | பாதிக்கப்பட்டவருக்கு ரூபாய் எட்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் பின்வருமாறு வழங்கப்பட வேண்டும்.<br>அ) பிணப்பரிசோதனைக்குப் பின்னர் 50 விழுக்காடு<br>ஆ) நீதிமன்றத்திற்கு குற்ற அறிக்கை அனுப்பப்படும்போது 50 விழுக்காடு | ரூ.3,75,000/- |
| 46. | கொலை, இறப்பு, படுகொலை, வன்புணர்ச்சி, கூட்டு வன்புணர்ச்சி, நிரந்தர ஏலாமை, கொள்ளை ஆகிய வன்கொடுமைக்கு இலக்கானவருக்கு கூடுதல் தீருதவிகள் | மேற்காணும் இனங்களுக்குத் தீருதவித் தொகை செலுத்தப் படுவதுடன் கூட, வன்கொடுமை நடந்த தேதியில் இருந்து மூன்று மாதங்களுக்குள் பின் வருமாறு தீருதவிக்கு ஏற்பாடு செய்யப்படலாம்.<br>அ) இறந்து போன ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின கைம்பெண்ணுக்கும் அல்லது சார்ந்திருக்கும் பிற ஒவ்வொருவருக்கும் மாதம் ரூபாய் ஐயாயிரம் மற்றும் மாநில அரசு அல்லது ஒன்றிய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட அரசு ஊழியர்களுக்கு பொருந்தும் அகவிலைப்படியுடன் ஓய்வூதியம், இறந்து போனவரின் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு வேலை, தேவைப்படின் விலைக்கு வாங்கித் தரப்படலாகும் வேளாண்மை நிலமும், வீடும்,<br>ஆ) வன்கொடுமைக்கு இலக்கானவர்களின் குழந்தைகளின் பட்டப்படிப்பு வரையிலான கல்வி மற்றும் பேணும் வகையான முழுச் செலவுத் தொகை, குழந்தைகள் ஆசிரமப் பள்ளிகளில் / உறைவிடப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படலாம்.<br>இ) மூன்று திங்கள் காலத்திற்கு தட்டுமுட்டுச் சாமான்கள், அரிசி, கோதுமை, பயிறுவகை, பருப்பு வகை முதலியன அளித்தல். | ஏதுமில்லை |

| வ. எண் | குற்றச் செயலின் பெயர் | SC / ST விதிகள் 1995 இன் விதியின்படி நிவாரணத் தொகை (திருத்த விதி 2016 மூலம் திருத்தப்பட்டது) | மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை |
|---|---|---|---|
| 47. | முற்றிலுமாக அழிந்து போன / எரிந்து போன வீடுகள் | செங்கல் / கல்தச்சு வீடுகள் எரிக்கப்பட்டு அல்லது அழிக்கப்பட்டுள்ளவிடத்து கட்டித் தரப்படுதல் வேண்டும் அல்லது அதற்கு அரசு வழிவகை செய்யல் வேண்டும். | ஏதுமில்லை |

திருமதி.என்.கயல்விழி செல்வராஜ்
ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்